Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-02 14-02-2005 திங்கட்கிழமை ஓசை -362


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:23. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:94. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11251)

# அரசியல் பணி புரியும் விடுதலைப்புலிகளிற்கு பாதுகாப்பு முன் அனுமதி தேவையில்லை!

## சந்தர்ப்பம் பார்த்துப் படுகொலை புரியப்பட்டதாக சு.ப. தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

**அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு உறுப்பினர்கள் சுதந்திரமாகச் சென்று தமது நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியும். அதற்கு யாரிடமும் பாதுகாப்பு முன் அனுமதி பெறவேண்டிய அவசியமும் இல்லை. சந்தர்ப்பம் பார்த்து பெரியதொரு படுகொலை புரியப்பட் டுள்ளது என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப்புலிகளின் மட்டு.- அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் படு கொலையைத் தொடர்ந்து கருத்து வெளியிட்டிருந்த சிறிலங்கா இரா

(14ஆம் பக்கம் பார்க்க)

### லெப். கேணல் கௌசல்யனுக்கு

## அவுஸ்.மெல்பேர்னில் நினைவுக் கூட்டம்

லெப்.கேணல் கௌசல்யனினதும் சக போராளி களினதும், மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களினதும் நினைவுகூரும் நிகழ்ச்சிக்கூட்டம் நேற்று அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

ஈதச்சுடரை பொனி இருதயநேசன் ஏற்றிவைத்தார். மாவீரர்களுக்கான மலர்மாலையை தமிழீழ விடு தலைப்புலிகளின் பொருளாதார மூலவள ஆலோ சகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து பொதுமக்களின் மலர் வணக்கமும், அகவணக்கமும் நடைபெற்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் சந்திரநேருவின் புகழுடல் நல்லடக்கம்

படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் சந்திரநேரு அரியநாயகத்தின் புகழுடம்பு பல்லாயிரக்கணக் கான மக்கள் மத்தியில் நேற்று முன்தினம் மாலை விநாயகபுரம் நாட்டுப்பற்றாளர் சதுக்கத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

திருக்கோவிலிலுள்ள அன்னாரின் இல்லத்தி லிருந்து புகழுடம்பு நேற்று முன்தினம் மாலை நாட்டுப்பற்றாளர் சதுக்க இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டபோது மக்கள் கண்ணீர் மல்க தமது சோகத்தை வெளிப் படுத்தினார்கள். அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசமெங்கும் சோகமாகவே காட்சியளித்தது. விடுதலைப்புலிகள் சார்பில் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு, முள்ளியவளையில் இன்று கௌசல்யன் உட்பட்டோர் நினைவரகக் கூட்டம்

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல் யன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் மற் றும் மூன்று போராளிகள் படுகொலை செய்யப்பட்டமையை கண்டித்து இன்று காலை 9.30 மணிக்கு மாபெரும் கண்டனக் கூட்டம் புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. முல்லை. மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்துள்ள இக்கண்டனக் கூட்டத்தின் இறுதியில் போர் நிறுத்த கண்காணிப்பு குழுத் தலைவருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. இக் கண்டனக் கூட்டம் இடம்பெறும் நேரம் வரையும் அனைத்து தொழில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்ட அரச அதிகாரிகள் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்திப்பு

பேரினவாத சக்திகளின் சதிமுயற்சி களை முறியடிக்க அனைவரும் ஒன் றிணைந்து செயற்பட வேண்டுமென தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதி காரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார். கடந்தகால யுத்தம் காரணமாக தென்தமிழீழ மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ள தென சுட்டிக்காட்டிய அவர் இவ்வாறு பாதிப் படைந்துள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசஅதிகாரிகள் முழுமூச் சாகச் செயற்படவேண்டுமெனத் தெரிவித்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணைந்துள்ள சிறிய கட்சிகள்கூட அரசாங்கத்தை மிரட்டப் பார்க்கின்றன!

### வேண்டுமாயின் வெளியேறட்டும் என்கிறார் சனாதிபதி சந்திரிகா

அரசுடன் இணைந்துள்ள சில கட்சிகள் சிறிய விடயங்களுக்குக் கூட அரசிலிருந்து விலகப்போவ தாகக் கூறுகிறார்கள் வேண்டுமானால் போகட்டும். இவ்வாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித் தார்.

அத்தனகல்ல வரையறுக் கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிக்கு அர சுடன் இணைந்த சில கட்சிகள் குறுக்கீடு செய்கிறார்கள்.

சிறிய விடயங்களுக்குக்கூட அவர் கள் அரசில் இருந்து விலகப் போவதாகக் கூறுகிறார்கள். ஒரு சொல் பிழைத்தாலும் நாங்கள் அரசை விட்டுப் போகிறோம் என்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்கு பயிற்சிக்குச்சென்ற ஐந்து கடற்படையினர் தப்பி ஓட்டம்

சிறிலங்கா கடற்படைக்கு அமெரிக்கா வழங்கியுள்ள யுத்தக்கப்பலில் பணியாற்றுவதற்கென பயிற்சிபெறுவதற்கு அமெரிக்கா சென்ற சிறிலங்கா கடற்படையினர் ஐவர் அமெரிக்காவில் காணாமல் போயுள்ளனர். அமெரிக்காவால் சிறிலங்காவுக்கு வழங்கப்பட்டுள்ள கறேஜஸ்' இந்தக் கப்பல் இவ்வாரம் சிறிலங்காவை நோக்கிப் புறப்படு கிறது. இது தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்ள கடற்படைத்தளபதி தயா சந்தகிரி அமெரிக்காவுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தபோதும் சந்தகிரி தனது பயணத்தை ரத்துச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் அரசாங்கத்திற்கு எதிராக தொடர் போராட்டங்களுக்கு ஏற்பாடு

சமாதான காலத்தில் நிராயுத பாணிகளான விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் படுகொலைக்கு எதிராக யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் பலவும் தொடர் வெகுசனப் போராட்டங் களிற்குத் தயாராகி வருகின்றன.

இன்று தனியார் ஊர்தி உரிமையாளர் சங்கங்கள் இணைந்து வாகனப் பேரணியொன்றை நடாத்துகின்றன. யாழ். நகரப் பகுதியிலிருந்து புறப்படும் இவ் வாகனப் பேரணி நல்லூர் கோவில் வீதியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலு வலகம் முன்பாக முடிவுறவுள்ளது. தனியார் சிற்றூர்திச் சங்கம் மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் என்பவை இணைந்து நடாத்தும் இப்பேரணியின் முடிவில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளிடம் ஏற்பாட்டாளர்கள் கையளிக்கவுள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை

(14ஆம் பக்கம் பார்க்க)


## மாமனிதர் சந்திரநேரு அரியநாயகத்திற்கு மனித உரிமைகள் செயலகத்தில் அஞ்சலி

(அலுவலக செய்தியாளர்)

வட-கிழக்கு மனித உரிமைகள் செய லகத்தில் மாமனிதர் அரியநாயகம் சந்திர நேருவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள வட-கிழக்கு மனித உரிமை கள் செயலகத்தில் மாதாந்தம் நடை பெறும் கூட்டத்திற்கு முன்பாக மேற்படி அஞ்சலி நிகழ்வு நடைபெற்றுள்ளது. மனித உரிமைகள் செயலகத்தில் அங்கத்தவராக இருந்து வந்த மாமனிதர் சந்திரநேருவை நினைவு கூரும் முகமாகவே மேற்படி அஞ்சலி செலுத்தப்பட்டது. மனித உரிமை கள் செயலகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்

(14ஆம் பக்கம் பார்க்க)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உதவி அரசாங்க அதிபர் (A.G.A) ஆக பதவியேற்கும் நண்பன்
செ. பிரணவநாதன்
அவர்களை
பாராட்டி
வாழ்த்துவதில்
மகிழ்வடைகின்றோம்
நண்பர்கள்.
(மதி,குணா,ரணேஸ், மனோ.)

(5365)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வட்டுவாகல் முல்லைத்தீவைப் பிறப்பிடமும் இருப்பிடமுமாகக் கொண்ட



திருமதி
அன்னப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை

தோற்றம் - 1932 - 02 - 03
மறைவு - 2005 - 01 - 16

பேரலையின் ஏக்கத்தால் எம்மை
விட்டுப் பிரிந்திட்ட - தாயே
எங்கள் உயர்ச்சிக்காகத் தங்களை
அர்ப்பணித்திட்ட - தாயே
உமை நினைந்து என்றும்
போற்றுகின்றோம்.

எமது துயரத்தில் பங்குகொண்டு எம்மை ஆற்றுப்படுத்திப் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் கண்ணீரோடு கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 15.02.2005 செவ்வாய்க் கிழமை வட்டுவாகலில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர்,
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5687)

# சாவு அறிவித்தல்



## நடராசா பாஸ்கரன் (கரன்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருவையாறு 3ஆம் பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பாஸ்கரன் (கரன்) முன்னாள் கரன் வர்த்தக நிலைய உரிமையாளர் (இரணைமடுச் சந்தி) 13.02.2005 (ஞாயிற்றுக்கிழமை) நேற்றுக் காலமாகி விட்டார். செல்லப்பா நடராசா, நடராசா நல்லம்மாவின் அன்புமகனும் பாஸ்கரன், சாந்தாவின் அன்புக் கணவரும், தனுசன், பாணுசன், சுதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். ஜெகநாதன், காலஞ்சென்ற ஜெகரன்(பாலு), ஜெயராசா, யோகேஸ்வரி, அம்பிகைபாகன், யோகராசாவின் அன்புச் சகேதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2005 இன்று பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக இரணைமடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். தகவல்:-

தம்பி அம்பிகைபாகன்
முழங்காவில்.

(5728)

## வரிவிளம்பரம்

### புதிய பாட நூல்கள்

பாலர்வகுப்பு முதல் உயர்தரம் வரையான அனைத்துப் புதியபாட நூல்களும் வந்துவிட்டன. சகல அறிவமுது பொத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (5723)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி. T.P 021-2285750. (சி.11235)

### தவறிவிட்டது

12.02.2005 அன்று மாலை 6-7 மணிக்கும் இடையில் க.புபலாசிங்கம் என்பவரினது தேசிய அடையாள அட்டை,நிரந்தர பயண அட்டை இரண்டு, ஒரு தொகைப் பணத்துடன் பேஸ், ஆகியவை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணி மனையில் ஒப படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்:புபலாசிங்கம். (5726)

# மகப்பேற்று பெண்நோயியல் சம்பந்தமான சிகிச்சை

யாழ்.போதனா வைத்தியசாலையில் சேவையாற்றும் மகப்பேற்று பெண் ஆரோக்கிய நிபுணரான டாக்டர் நவநீதன் அவர்களால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்தவமனையில் எதிர்வரும் 15ஆம்,16ஆம் திகதிகளில் மகப்பேறு, பெண்நோயியல் சிகிச்சைகள் நடைபெறவுள்ளன. குறிப்பாக கருத்தடை,கற்பப்பை குடலிறக்கம்,கற்பப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு போன்ற பிரச்சினைகளுக்கான சத்திரசிகிச்சைகளும், விசேட மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. பயன்பெற விரும்புவோர் வெளிநோயாளர் பகுதியுடன் தொடர்புகொள்ளவும்.

## மீண்டும் சொந்த இடத்தில்

(அலுவலக செய்தியாளர்)

ஆழிப்பேரலை காரணமாகப் புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் தமிழீழ வைப்பக முல்லைத்தீவு ஊரக்க் கிளை மீண்டும் தனது நிரந்தர இடத்தில் இயங்கவுள்ளது.

இதன் பிரகாரம் மேற்படி வங்கிக் கிளையானது இன்று முதல் முல்லை நகரில் முன்னர் இயங்கிய இடத்தில் மீண்டும் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சான்றிதழ் வழங்கல்

தொலைக்கல்வி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு கிளி/வலயக்கல்வி அலுவலகக் கல்வி வளநிலையத்தில் நடைபெறும். 2001-2002 பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்திய ஆசியர்கள் அனைவரும் உரிய நேரத்தில் சமுகமளித்து,சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம்,புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால்

யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான பிறிமா கிறீன் மா கேள்விகோரல்

சனவரி, பெப்ரவரி,மார்ச்-2005

01] யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு மாதமொன்றிற்கு 1000 Mt படி 3000 Mt பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| விநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 சனவரி | 1000 Mt |
| 2005 பெப்ரவரி | 1000 Mt |
| 2005 மார்ச் | 1000 Mt |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.02.14 ஆம் திகதி தொடக்கம் 2005.02.25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

02] கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக் கூடிய கேள்விவைப்பாக (விலைகேள்முறி-Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது.)

03] பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.02.28 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

04] நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிறீமா கிறீன் மா வழுங்கலுக்கான கேள்வி'' என எழுதப்பட வேண்டும்.

05] ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக-PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

06] கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் தை மாதத்திற்கு 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்,
தலைவர்/அச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
13.02.2005

(சி11334)



12.02.05 வடகொரிய இராணுவத்தினர் தென்கொரிய மக்களை தலைவர் கிம் ஜோனுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்தினார்கள். அமெரிக்க வடகொரிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்திய பின் இவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

## இஸ்ரேல் முன்னாள் பிரதமர் நேடான்யாகு மீது தாக்குதல்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் நாட்டின் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நேடான் யாகு. இவர் இப்போது நிதி மந்திரியாக இருக்கிறார். 55 வயதான இவர் டெல் - அவிவ் நகர் அருகே ஒரு அரசு விழாவில் கலந்து கொண்டார். அப்போது இஸ்ரேலியர்களில் வலது சாரி மனோபாவம் கொண்ட ஒரு குழு அவரைத் தாக்கியது. அவரது பாதுகாவலர்கள் இதைப் பார்த்து விட்டுஅவரை பத்திரமாக காரில் ஏற்றி அங்கு இருந்து அனுப்பி வைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



வடபங்களாதேஷ் தலைநகர் குவாணூவுக்கு படகில் ஆற்றைக் கடக்கும் பொழுது 22 பொது மக்கள் காணாமல் போய் உள்ளனர் என பங்களாதேஷ் தெரிவித்துள்ளது.

# ஈராக்கிய பொதுத் தேர்தல் முடிவு வெளியானது

# இஸா அலாவி தலைமையிலான கூட்டணி படுதோல்வி

## ஐக்கிய ஈராக்கிய கூட்டணிக்கு வெற்றி

(பாக்தாத்)

**ஈராக்கில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அமெரிக்க ஆதரவு பெற்ற இடைக்கால அரசு தலைவர் இஸா அலாவி தலைமையிலான கூட்டணி தோல்வியை தழுவியுள்ளது. ஈராக் பொதுத் தேர்தல் முடிவுகள் நேற்றிரவு வெளியானது.**

ஈராக்கில் கடந்த சனவரி 31 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் முக்கிய ஷியாப் பிரிவைச் சேர்ந்த ஐக்கிய ஈராக்கியக் கூட்டணி வெற்றியீட்டியுள்ளது.

இந்தத் தேர்தல் முடிவுகள் நேற்றிரவு வெளியானது. இதில் ஐக்கிய ஈராக்கிய கூட்டணி அளிக்கப்பட்ட வாக்குகளில் 48.1 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது. குர்தீஸ் கூட்டணி 25.7 சதவீத வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளது.

இதேவேளை ஈராக்கின் தற்போதைய இடைக்கால பிரதமர் இஸா அலாவி தலைமையிலான கூட்டணி 13.8 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று மூன்றாம் இடத்தையே அவரால் பிடிக்க முடிந்தது.

ஈராக்கில் கடந்த ஐம்பது ஆண்டுகளின் பின்னர் இந்தத் தேர்தல் நடைபெற்றுள்ளதாகவும் மக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கும் புதிய ஈராக் நாடு உருவாகுவதற்கும் இந்தத் தேர்தல் முடிவுகள் வழிவகுத்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் ஹரி அயா தெரிவித்துள்ளார்.

# வெனிசுலாவில் வெள்ளப்பெருக்கு

# 26 பேர் உயிரிழப்பு ; போக்குவரத்து ஸ்தம்பிதம்

வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப்பெருக்கு காரணமாக 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

வீதிகள் பல நீரில் மூழ்கியுள்ளமையால் பின்தங்கிய பகுதிகளுக்குச் செல்வதற்கு மீட்புப் பணியாளர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்.

இதேவேளை மண்சரிவும் ஏற்பட்டுள்ளது. பல வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளது.




வடகொரியா எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்து தென்கொரிய தலைவர் கிம்ஜோன் தேசியக் கொடியை சோல் தலைநகர் அமெரிக்கா உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் முன்பாக எரித்தனர். தங்களின் ப[illegible]காப்புக்காகவே அணு[illegible]தியை ஏற்படுத்தி உ[illegible]ளாம் எனவும் இது [illegible] அரசியல பாதுகாப்[illegible]கவே ஏற படுத்தி [illegible]ளோம் என தென்கொரிய தலைவர் கிம்ஜோன் தெரிவித்துள்ளார்.

# ஆளும் கட்சிக்கு ஆதரவாக பங்களாதேஷில் கண்டன ஊர்வலம்

பங்களாதேஷில் ஆளும் கட்சிக்கு ஆதரவான குழுக்கள் பல ஒன்றிணைந்து எதிர்க்கட்சியினரின் ஹர்த்தால், மற்றும் வேலைநிறுத்தம் என்பனவற்றிற்கு எதிராக பெரும் கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளன.

எதிர்க்கட்சிகள் மக்களின் அன்றாட வாழ்வை சீர்குலைக்கும் சதிமுயற்சிகளில் ஈடுபட்டுவருவதாக இக்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. அரசாங்கத்தின் சார்பாக இக்கண்டன ஊர்வலத்தை கூட்டுறவுத் துறை அமைச்சர் அப்துல் ஏற்பாடு செய்துள்ளார். தேசப்பற்றுமிக்க மக்கள் எதிர்க்கட்சியின் தீய நோக்கத்திற்கு எதிராக ஒன்று திரள வேண்டுமென அவர் கோரியுள்ளார். பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தென் கொரிய இராணுவ வீரர்கள் நிலையொன்றை அவதானிக்கின்றனர்.

# ஐரோப்பிய நாடுகள் கருத்துவேறுபாடுகளை மறந்து பயங்கரவாதத்துக்கு எதிராக போராட முன்வரவேண்டும்

## ரம்ஸ் பீல்ட்

ஐரோப்பிய நாடுகள் ஈராக் விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுடன் கொண்டிருந்த கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு பயங்கரவாதத்திற்கு எதிராக போராட முன்வரவேண்டுமென அமெரிக்க பாதுகாப்பமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெர்மனியில் இடம் பெற்ற உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்ட மாநாடு ஒன்றில் உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தீவிரவாதிகளினால் மட்டும் தனித்துநின்று அழிக்க இயலாது ஜேர்மனி ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும் அதன் மீள்கட்டமைப்பு பணிகளுக்கு அளப்பரிய உதவிகளை வழங்கியுள்ளது. பயங்கர ஆயுதங்களை அழிப்பதில் நட்பு நாடுகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட வேண்டிய புரிந்துணர்வு, நிதியுதவி, புலனாய்வுத்தகவல் பணிமாற்றம் என்பன உட்பட பல வேறுவிடயங்கள் தொடர்பாக தெரிவித்துள்ளார்.

# நேபாளத்தில் மீண்டும் மக்களாட்சியைக் கொண்டுவர அமெரிக்கா உட்பட மூன்று நாடுகள் கூட்டாகத் திட்டம்

நேபாளத்தில் மீண்டும் மக்களாட்சியைக் கொண்டுவர இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து கூட்டாகத் திட்டம் தீட்டியுள்ளன.

நேபாள நாட்டில் பிரதமர் ஷேர் பகதூர் தாபா தலைமையில் இருந்த மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசைக் கலைத்து விட்டு ஆட்சிப் பொறுப்பை மன்னர் ஞானேந்திரா எடுத்துக்கொண்டார் அல்லவா? தனக்குக் கீழே 10 மந்திரிகளை மன்னர் நியமித்தார். அதோடு நாடு முழுவதும் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்து அரசியல் கட்சித் தலைவர்களைக் கைது செய்து வீட்டுக்காவலில் வைத்தும் நடவடிக்கை எடுத்தார்.

மன்னரின் இந்த நடவடிக்கைக்கு இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. அதன் எதிரொலியாகக் கைது செய்யப்பட்ட இரண்டு முன்னாள் பிரதமர்கள் உட்பட ஏழு தலைவர்களை மன்னர் ஞானேந்திரா விடுதலை செய்தார். ஆனாலும், இன்னும் 100- இற்கும் மேற்பட்ட தலைவர்கள் சிறையில் தான் உள்ளனர்.

நேபாளத்தில் உடனடியாக மீண்டும் மக்களாட்சியை ஏற்படுத்தும் முயற்சிகளில் இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் கூட்டாக இறங்கியுள்ளன.

டில்லி, வோஷிங்டன், லண்டன் ஆகிய நகரங்களில் இருந்து கொண்டே இந்த மூன்று நாடுகளின் ராஜதந்திரிகள், இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

நேபாளத்தில் மக்களாட்சி கலைக்கப்பட்டதை ரத்துச் செய்யவும், மீண்டும் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசைப் பதவியில் அமர்த்தவும் இந்த மூன்று நாடுகளும் தீவிரமாக ஈடுபட்டு உள்ளன.

நேபாளத்தில் மக்கள் அரசு கலைக்கப்பட்டதும், அந்த அரசை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்று இந்த 3 நாடுகளும் ஏற்கனவே கடும் கண்டனத்துடன் அறிக்கைவிட்டது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் மேற்கு வங்காள மாநிலம் டாக்கா நகரில் நடக்க இருந்த 7 நாடுகள் சார்க் மாநாட்டில் நேபாள நாட்டில் பிரதிநிதியாக தன்னைக் காட்டிக்கொள்ள மன்னர் ஞானேந்திரா திட்டமிட்டு இருந்தார். அந்த முயற்சியை முறியடிக்கும் வகையில் சார்க் மாநாட்டை புறக்கணிப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்தார். அதன் எதிரொலியாக சார்க் மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதும் நினைவு கூறத்தக்கது.

-வடகொரிய அணுவாயுத விவகாரம்-

# ஆறு நாடுகள் பங்கேற்கும் பேச்சுவார்த்தையில் வடகொரியாவையும் இணைக்க சீனாவிடம் உதவி

(வோஷிங்டன்)

வடகொரிய அணுவாயுத விவகாரத்துக்கு தீர்வு காணும் வகையில் ஆறு நாடுகள் பங்கு பற்றும் பேச்சுவார்த்தையில் வடகொரியாவையும் அழைப்பதில் சீனா பெரும் பங்காற்ற முடியும் என தென்கொரியாவும் அமெரிக்காவும் அறிவித்துள்ளன.

வடகொரியா கடந்த வியாழக்கிழமை விடுத்த அறிவித்தல் ஒன்றில் தாம் அணுவாயுதங்களை வைத்திருப்பதாகவும் அதேவேளை 6 நாடுகள் பங்குகொள்ளும் மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை எனவும் அறிவித்திருந்தது.

இந்த அறிவித்தலால் அமெரிக்கா, சீனா, ஜப்பான்,தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# அழிவுகளைக் கண்டு நாம் துவண்டுவிடக்கூடாது

# உறுதி,உழைப்பு,நம்பிக்கை எம்மை வளமாக்கும்

## மட்டக்களப்பில் ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)


**"அழிவுகளைக் கண்டு நாம் துவண்டு விடக்கூடாது உறுதியும், உழைப்பும், நம்பிக்கையும் இருக்குமானால் நாம் முன்பு இருந்ததை விடப் பல மடங்கு சிறப்புக்களுடன் வளர்ச சியடைய முடியும்" இவ்வாறு மட்டக்களப்பு பழுகாமத்திலுள்ள காந்த ரூபன் அறிவுச் சோலை சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்கு வருகை தந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி தெரிவித்தார்.**

மட்டக்களப்பிற்கான விஜயமொன்றை நேற்று முன்தினம் மேற் கொண்டிருந்த போது அவர் மேற்படி சிறுவர் பராமரிப்பு இல்லத்தை சென்று பார்வையிட்டார் இவ் விஜயத்தின் போது விசேட சமாதானத தூதுவர் யசூசி அகாசி தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்து தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தமை தெரிந்ததே.

சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் விசேட சமாதானத் தூதுவர் மேலும் உரையாற்றுகையில்;நீங்கள் எல்லோரும் கடந்த இருபத்தாறு வருட காலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். இவ்வாறான நிலையில் சுனாமி அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளமையை நினைக்கும் போது கவலையாகவுள்ளது.

அழிவுகளைக் கண்டு நாம் துவண்டுவிடக்கூடாது உறுதியும், உழைப்பும், நம்பிக்கையும் இருக்குமானால் நாம் முன்பு இருந்ததை விடப் பல மடங்கு சிறப்புக்களுடன் வளர்ச்சியடைய முடியும். இதற்கு எமது ஜப்பான் நாடு உதாரணமாக அமையும். இதைவிட பாரிய பேரழிவைச் சந்தித்தது எமது நாடு. நாங்கள் அதைவிடப் பலமடங்கு இன்று வளர்ச்சியடைந்துள்ளோம். நீங்களும் மன உறுதியுடன் செயற்பட வேண்டும். உங்களுக்கு வழிகாட்டிகளாகச் செயற்படுபவர்களின் அறிவுரைகளுக்கு ஏற்ப சிறந்த கல்வியறிவைப் பெற்று முன்னேற வேண்டும். உங்களது வளர்ச்சிக்கு எம்மால் ஆன முழு உதவிகளையும் நாம் வழங்கத் தயாராகவுள்ளோம். எதிர்காலத்தில் முடிந்தளவு உதவிகள் உங்களைச் சேரும். நீங்கள் என்றும் மகிழ்ச்சி யாக இருக்க ஆசி கூறுகிறேன் என்றார்.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித் தேவன், மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் (மார்ஷல்), துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத்தளபதி ரமணன் ஆகியோரும், பழுகாமம் விபுலானந்தா சிறுவர் இல்லம், திலகவதியார் சிறுமியர் இல்லம், ஆகியவற்றின் சிறார்கள் உட்பட பொதுமக்கள பலரும் கலந்து கொண்டனர். இதேவேளை யசூசி அகாசி பாலமுனை பிரதேசத்தில் சுனாமியால் பாதிப்புற்ற முஸ்லிம் மக்களை சென்று சந்தித்ததுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துயர்துடைப்புப் பணி குறித்தும் ஆராய்ந்தார். அத்துடன் மட்டக்களப்புக்கும் சென்று பார்வை யிட்டார். அவருடன் மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் (மார்ஷல்), சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் சென்றிருந்தனர்.



## சுய தொழில்வாய்ப்பை ஊக்குவிக்க கடனுதவி

வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் சுய தொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் சமூக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையில் வாழும் மக்கள் மத்தியில் கடனுதவி வேலைத திட்டங்களை ஒருங்கிணைத்து முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் 09.02.2002 அன்று பூம்பு கார் என்னும் இடத்தில் 30குடும்பங்களுக்கு நிகொட் திட்ட நிதியுதவியுடன் மூன்று இலட்சம் ரூபா கடனை வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி யுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா பத்தா யிரம் ரூபா வழங்கப்பட் டுள்ளது. இக்கடன் உதவியானது சுய தொழில வாய்ப்பை இழந்து வாழும் குடும்பங்களுக்கு ஊக்குவிப்பாக அமையும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

## தேசியஅடையாள அட்டை வழங்க நடமாடும் சேவை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் நடமாடும் சேவை மூலம் தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 19, 20ஆம் திகதிகளில் மேற்படி நடமாடும் சேவை இடம் பெற வுள்ளது.

தேசிய அடையாள அட்டை பெற வேண்டியவர்கள் அதற்கான விண்ணப்பங் களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக அந்தந்தப்பிரிவுக் கிராம சேவை அலுவலர்களிடம் ஒப்படைக்கும் படியும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அற்ற வர்கள் சத்தியக்கடதாசி மூலம் பிறப்பினை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கலாமெனவும் கரைச்சி பிரதேச செயலர் சுலோஜினி தெரி வித்துள்ளார். (சோ)

## உந்துருளி-ஈருருளி மோதல்; இளம்பெண் படுகாயம்!

(வட்டக்கச்சி)

தருமபுரம் பகுதியில் ஈருருளியுடன் உந்துருளி மோதிக் கொண்டது இச் சம்பவமானது நேற்று முன்தினம் மாலை 4.15 மணிக்கு இடம் பெற்றது. இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில்; கட்டைக் காடு பெரிய குளத்தில் இருந்து தருமபுரத்தில் இருக்கும் தனது வீட்டுக்கு ஈருருளியில் வந்து கொண்டிருந்தவரும் கிளிநொச்சியில் இருந்து விசுவமடு நோக்கி உந்துருளியில் சென்று கொண்டிருந்தவரும் தருமபுரம் வைத்தியசாலைக்கு அண்மையாக மோதிக்கொண்டனர். இச் சம்பவத்தின் போது தருமபுரத்தைச் சேர்ந்த சிறிபால ஜெயந்தினி (வயது 18) என்பவரே படுகாயம் அடைந்து தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மற்றும் ஈருருளியும் உந்துருளியும் சிறு சேதங்களுக்குள்ளானது. இவ் விபத்து விசாரணையினை விசுவமடு காவல்துறையினர் நடத்திவருகின்றனர். (12)

## பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லைக்குள் மண்அகழ்வதற்கு அனுமதியில்லை

### -பிரதேசசெயலாளரின் அறிவிப்பில் தடுமாற்றம்

(வடமராட்சி கிழக்கு)

பச்சிலைப்பள்ளி பிரதேச எல் லைக்குள் மண் அகழ்வதற்கு அனுமதி கொடுக்க வேண்டா மென்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரால் பச்சிலைப்பள்ளி பிர தேசசபை செயலாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 11ஆம் திகதி மதியம் 1.30 மணியளவில் தனிநபர் ஒருவருக்கு பிரதேச செயலகத்தினால் மண் அகழ்விற்கு அனுமதி வழங்கும்படி பச்சிலைப் பள்ளிப் பிரதேசசபை செயலாள ருக்குக் கொடுக்குமாறு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

முதலில் எவருக்கும் மண் எடுப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று கடிதம் அனுப் பப்பட்டுள்ளது. தற்போது இவருக்கு அனுமதிவழங்கும் படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதனால் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் என்ன செய்வது என்று தெரியாமல் அன்று மதியம் 1.30 மணிக்கு திண்டாடிக்கொண்டு நின்ற தனைக் காணக்கூடியதாக இருந்தது. (11)

## உந்துருளிகளில் தலைக்கவசம் அணியாது பயணிப்பதால் விபத்துக்களில் மரணம் சம்பவிப்பது அதிகரிக்கின்றது!

### -கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி கருத்து

(அலுவலக செய்தியாளர்)

உந்துருளிகளில் பயணிப்ப வர்கள் விபத்துக்களில் சிக்க நேரிடும்போது அனேகமானவர்கள் மரணத்தைத் தழுவிக்கொள்வதற்கு முக்கியமான காரணம் யாதெனில் தலைக்கவசம் அணியாது பயணிப்பதேயாகும். இவ்வாறு கிளிமாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சதானந்தன் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உந்துருளி விபத்தில் சிக்கி வைத்தியசாலைக்குச் சிகிச்சைக் கென எடுத்துவரப்பட்டவர்களில் அனேமானவர்கள் தலையில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையி லேயே எடுத்துவரப்படு வதனைக் காணக் கூடியதாகவுள் ளது.

விபத்தின் பொழுது தலைப் பகுதி மோசமாகப்பாதிப்படையும் போது எவ்விதமான சிகிச்சை யினை மேற்கொள்கின்ற பொழு திலும் அதனால் தலையில் காயங் களுக்குள்ளாவோர் உயிர்பிழைப் பதென்பது அரிதாகவே காணப்படு கின்றது. மற்றும் விபத்து காரண மாக தலையில் காயங்களுக்குள் ளாகும் ஒருவர் சிகிச்சையின் மூலம் குணமடையும் போதிலும் அவர் வேறு பக்கவிளைவுகளுக்கு உள்ளாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட நேரிடும். இன்று ஏ-9 நெடுஞ்சாலையில் வாகனப்போக்கு வரத்துக்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக இது வரை காலமும் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் உந்துருளியில் பயணிக்கும் போது ஏற்பட்ட விபத் துக்களே கூடுதலாக இடம்பெற்றுள் ளமை குறிப்பிடத் தக்கது. எனவே வருமுன்காப்போம் என்ற ரீதியில் உந்துருளிகளில் பயணம் மேற்கொள்ளும் பொழுது தலைக்கவசம் அணிந்து செல்வதன் மூலம் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளலாம இவற்றினை கடைப்பிடிப்பது அவசியமானதும் கூட எனத் தெரிவித்துள்ளார்.(சோ)

## பிரதேச வர்த்தக சங்க 2005 நிர்வாகத் தெரிவு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேச வர்த்தகர்களுக்கான 2005 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் இராம நாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முதன்மை மண்டபத்தில் இடம் பெற்றது. 2005 ஆம்ஆண்டுக்கான புதிய தலைவராக சந்திரனும், உபதலைவராக கமலநாதனும், செயலாளராக பிரபாகரனும் உபசெயலாளராக குமுதினியும், பொருளாளராக மகேஸ்வரனும் உறுப்பினர்களாக முகுந்தன், குணம், சிலன் சுதன், ஜீவா, தேவராசா, கோபு ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.இந்நிகழ்வில் 2005 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் கடைகள் பூட்டப்பட வேண்டும் எனவும் புதிய திட்டங்கள் சிலவும் வகுக்கப்பட்டன. இந்நிகழ்விற்கு வட்டக்கச்சிப் பிரதேச காவல துறை உறுப்பினர்களும், வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநில வனும் மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்களின் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (12)

## சின்னச்சாளம்பன் பகுதியில் அன்பழகன் முன்பள்ளி திறப்பு

சர்வோதயத்தினதும் பொருண் மியமதியுரையகத்தினதும் நிதி யுதவியுடன் அமைக்கப்பட்ட ஒட்டு சுட்டான் சின்னச்சாளம்பன் பகுதியி லுள்ள அன்பழகன் முன்பள்ளி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பொருண்மிய மதியுரையக நிர் வாக அலுவலர் திருமதி. வி.சுகந் தினி தலைமையில் நிகழ்வு நடை பெற்றது. இதில் ஈகச்சுடரினை ஒட்டுசுட்டான் வலயப் பொறுப்பாளா எழில் ஏற்றிவைக்க, மங்கல விளக் கினை ஒட்டுசுட்டான் கிராம சேவ கர் தமிழ்ச்செல்வன், எம்.ஆர். ஆர்.ஓ. நிறுவன இணைப்பாளர் சுதாகர் ஆகியோரும் ஏற்றி வைத் தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப் பாளர் புரட்சி நிலவன் ஏற்றிவைத்தார் முன்பள்ளி பெயர்ப்பலகையினை ஒட்டுசுட்டான் உதவி அரசஅதிபர் க.சுபாஜினி திரைநீக்கம் செய்து வைத்தார். முன்பள்ளி கட்டடத் தினை சர்வோதயத் திட்ட இணைப் பாளர் உதயன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கருத்துரைகளைத் துணுக்காய் வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர், ஒட்டுசுட்டான் உதவி அரசஅதிபர், சர்வோதயத்திட்ட இணைப்பாளர், ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

நன்றியுரையினை பொருண்மிய மதியுரையக வெளிக்கள அலுவலர் இ.விஜயகுமார் நிகழ்த்தினார்.

## புதிய நிர்வாகம் தெரிவு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி தூயமணி முன் பள்ளியில் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவானது கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் மாயவனூர் பிரிவு கிராமசேவையாளர் ஜோண் ஜெகநாதன் தலைமையில் இடம் பெற்றது. புதிய தலைவராக:- விக் கினேஸ்வரனும், உபதலைவராக ஜோண் ஜெகநாதனும் செயலளா ராக:-திருமதி.பாக்கியலட்சுமியும் உபசெயலாளராக வே.ஜெயநா தனும் உறுப்பினர்களாக :-க.சசி கலா, கே.கலைச்செல்வி, ந.ஜெக தாசன்,இ.கலைவாணி வே.ஜெய சீலன், ச.திருவதனாவும் முன்பள்ளி யின் மேற்பார்வையாளராக கௌசலாவும் தெரிவு செய்யப்பட் டனர். (12)

# அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களின் தேவையறிந்து சரியான வகையில் செயற்படுவது அவசியமாகும்

## -யாழ் . அரச அதிபர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ் மாவட்டத்தில் செயற்பட்டு வரும் உள்ளூர் மற்றும் வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களின் தேவைகளை அறிந்து தமது சேவைகளை நேர்மையான முறையில் வழங்குவது அவசியமென யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.**

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய செயலகத்தில் இடம்பெற்ற இவ் இணையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கே.கணேஷ் இதனைத் தெரிவித்தார்.

அரச புறக்கணிப்புக்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ வேண்டியது அரச சார்பற்ற நிறுவனங்களின் கடமை. இக் கடமைகளை நிறைவேற்றும் போது அரச சார்பற்ற நிறுவனங்கள் சிறந்த திட்டமிடல் அடிப்படையில் மக்களின் தேவைக்ளை நன்கு அறிந்து செயற்படுவது அவசியம்.

மக்களின் சேவைகளுக்கென வழங்கப்படும் பொது நிதிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் பொறுமையுடன் கையாள்வது அவசியம். இதற்காக இந் நிறுவன அமைப்புக்கள் சரியான கணக்கறிக்கைகளையும், நேர்மையான செயற்றிட்டங்களையும் ஒளிவுமறைவு இன்றி செயற்படுத்துவது அவசியம்

பொது மக்களுக்கான சேவைகளைத் தூர நோக்குடனும் மக்களின தேவைகளை அறிந்தும் வழங்குவதன் மூலமே மக்களுக்கு நம்பிக்கையுள்ள நிறுவனங்களாக எந்த ஒரு அமைப்பும் மாறமுடியும்.

இதை விட யாழ் மாவட்டத்தில் இயங்கி வரும் அரச சாபற்ற அமைப்புக்கள் தன்னிச்சையாக செயற்படாது அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினூடாக செயலாற்றுவது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

# கருத்தரங்கு திகதி மாற்றம்

யாழ்ப்பாணம் சமூகஅபிவிருத்தி மன்றத்தின் கருத்தரங்கு 12.02.2005 இல் மாவட்ட ரீதியில் ஒழுங்கு செய்ய்ப்பட்டது. ஹர்த் தால் காரணமாக குறித்ததினத்தில் நாடாத்த முடியவில்லை ஆகவே 19.02.2005 சனிக்கிழமை 10.00 மணிக்கு இக் கருத்தரங்கு நடாத்தப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்கல்வி மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி வகுப்பு

உயர் கல்வி நிறுவனங்களில் உயர் கல்வியை தொட்ரும் மாணவாகளின் கணினி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் ச்ர்வதேச தமிழீழ மாணவர் பேரவையானது இலவச கணினிப்பயிற்சி வகுப்புக்களை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளது. இவ்வகுப்புக்களில் பங்குபற்ற விரும்பும் உயர் கல்வி பயிலும் மாணவர்கள் இவ்வகுப்புக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் பேரவை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றனர். மேலும் பேரவையால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வின் மூலமே இப்பயிற்சி வகுப்புக்கான மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள பாட அலகுகளை மையமாகக் கொண்டே இவ்வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன. (36)

# பொதுமக்களிடம் அபகரித்து வாழும் இளைஞர்கள் அடாவடி அதிகரிப்பு!

(நல்லூர்)

இரவு நேரம் தனிமையில் வந்த வயோதிபரைத் தள்ளிவீழ்த்திய திருடன் அவர் வாங்கி வந்த வாழைப்பழப்பையைத் திருடிக் கொண்டு ஓடினான்.

இச்சம்பவம்நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கண்ணாதிட்டிச்சந்திக்கு அண்மையாக நடந்துள்ளது. இப்பகுதியில் தனிமையில் செல்லும் பெண்கள், வயோதிபர்கள் அப்பகுதியில் தேவையற்ற முறையில் நிற்கும் இளைஞர் குழுவினால் பல்வேறு துன்பங்களுக்கும், வேண்டத்தகாத சேட்டைகளுககும் உள்ளாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் வயோதிபர் கொண்டு வந்த பையினுள் என்ன இருக்கின்றது என்பதைத் தெரியாமல் இவர் கடையில் இருந்து பையில் பெறுமதி உடைய பொருட்களைக்கொண்டு வருவதாகக் கருதியே பையைப்பறித்துச் சென்றுளளார்.

அப்பகுதியில் சனநடமாட்டம் இருந்த போதிலும் . இளைஞர்களின் பயம் காரணமாக வயோதிபருக்கு உதவி செய்யயாரும் முன்வரவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (41)

# வடமராட்சியில் சுனாமி பாதித்த பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதில் கடற்புலிகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் கடற்புலிகள் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துதல், மீளக்குடியமர முடியாத நிலையில் தற்காலிக வதிவிடங்களில் தங்கியிருக்கும் மக்களைப் பராமரித்து அவர்களின் நலன் பேணும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பவற்றில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதைவிட சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான உதவிகள் மற்றும் மாற்று ஏற்பாடுகளுக்கான நடவடிக்கைகளிலும் கடற்புலிகளின் யாழ்.மாவட்டப் பிரிவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.அரசின் புறக்கணிப்புக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடற்புலிகளின் இவ் உதவிகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன என சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (33)

# நெடுந்தீவுப் பிரதேச மக்கள் பாதிப்புற்றோருக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நெடுந்தீவுப் பிரதேசதேசிய எழுச்சிப் பேரவை உதவிகளை வழங்கியது.

நெடுந்தீவுப் பகுதி மக்களிடமிருந்து திரட்டிய உதவிப் பொருடகளை வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் அண்மையில் கையளித்தனர். உதவிப் பொருட்கள் கையளிப்பு நிகழ்வில் சமாசத்தின் உப தலைவர் குட்டித் தம்பி, செயலாளா சூரியகுமாரும் மற்றும் சங்க பிரதிநிதிகளும் தேசிய எழுச்சிப் பேரவையின் சார்பில் செயலாளர் கணேசலிங்கம், நெடுந்தீவு பொது அமைப்புக்கள் ஒன்றியத்தலைவர் மரியாம்பிள்ளை ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர். இதில் பிடவைகளும், தேங்காய்களும்அடங்கி இருந்தன.

இப் பொருட்கள் வடமராட்சியில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதேவேளை நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை இயற்கை அனர்த்த துயர் துடைப்பு நிதியத்திற்கு முதற்கட்டமாக இருபதினாயிரம் ரூபாவை வழங்கியது. இந்நிதியை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொருளாளர் க.சிவராசாவிடம் மாவட்ட அலுவலகத்தில் வைத்து வழங்கப் பட்டது. (33)

# கரையிலிருந்து 100 மீற்றருக்கப்பால் குடியிருப்புக்களை அமைக்கும் திட்டம் குடாநாட்டில் சாத்தியப்படாது

## கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச சம்மேளனம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

கடற்கரையோரங்களில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் மட்டுமே குடியிருப்புக்களையோ, கட்டடங்களையோ அமைக்க முடியும் என்ற அரசின் புதிய சட்டமுறையானது யாழ்குடாநாட்டின் கரையோரப்பிரதேசங்களில் எவ்விதத்திலும் சாத்தியப்படாது என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச சம்மேளனம் தெரிவித்திருக்கின்றது.

இது குறித்துத் கருத்துத் தெரிவித்த இச்சம்மேளனத்தின் தலைவர் க.சூரியகுமார் கடல் அனர்த்தங்களில் இருந்து கரையோரப் பிரதேச வாழ் மக்களைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் அரசு அமுல்படுத்தும் இப்புதிய சட்ட நடைமுறைகளால் பல கடற்கரையோரக்கிராமங்கள் இல்லாது அழிந்து போய்விடும்.

இதைவிட கரையோரப் பிரதேசங்களை அண்டிவாழ்வோர் தமக்கான குடியிருப்புக்காணிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு இடர்பாடுகள் புதிய பல பிரச்சினைகள் தலைதூக்கும். குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் வாழ்வோர் பெரும்பாலும் ஏழைகளாகவே காணப்படுவதாலும், அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தால் சகல உடமைகள் சொத்துகளையும் இழந்திருப்பதனால் அவர்கள் புதிய காணிகளை அதிக விலை கொடுத்து வாங்க முடியாத திண்டாட்டம் தோன்றும். இவை அனைத்துக்கும் மேலாக கரையோரப் பிரதேச மக்கள் புதிய சட்டத்தின் அடிப்படையில் தமது குடிமனைகளை அகற்றிக் கொண்டால் கடற்படையினர் தமது கரையோர ஆக்கிரமிப்பு நிலப்பரப்பை விஸ்தரிப்பர். இது தமிழ்மக்களுக்கு மேலும் தலையிடியை உருவாக்குவதாக அமையும்.

எனவே அரசு தனது இப்புதிய சட்ட நடைமுறைகளை அமுல் செய்வதாயின் கரையோர கடற்படையின் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் காணிகளை இழப்பவர்களுக்குப் புதிய காணிக ளைப் பெற்றுக் கொடுப்பது அவசியம் என்றார். (33)

# குடாநாட்டில் மிதிவெடிகள் அகற்றும் செயற்பாடுகளுக்கு படையினர் முட்டுக்கட்டை!

யாழ். மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் மிதிவெடிகள் அகற்றும் செயற்பாடுகளுக்கு சிறிலங்காப்படையினர் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவதாக மிதிவெடிகள் அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர்.

"ஹலோட் ரெஸ்ட்" எனும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அரியாலை மற்றும் சிறுவிளான், மந்திகை ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த மிதிவெடிகள் அகற்றும் பணிகளைத் தடுத்து நிறுத்திய சிறிலங்காப் படையினர் அங்கு மிதிவெடி அகற்றலில் ஈடுபட்டிருந்தோரை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இடம் பெயர்ந்து வாழும் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் நோக்குடன் இடம்பெற்றுவரும் இம் மனித நேயப்பணிகளுக்குப் படையினர் தடைவிதிப்பது குறித்துப் பலத்த விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# பாதிப்புற்றோருக்கு வீடமைக்க மணல் பெறுவதில் நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகளுக்குத் தேவையான மணலினைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக இவ் வீடமைப்புப் பணிகள் தாமதமாவதாக யாழ்.அரச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான வீடுகளை நிர்மாணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலேயே இச்சிக்கல் தோன்றியுள்ளதாகவும் இருப்பினும் இதற்கான மாற்று நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் எனவும் அரசசெயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சுனாமியால் பாதிப்புற்ற மீனவர்களின் தொழில் முயற்சிக்கு உதவியில்லை

## -அரசின் செயற்பாட்டிற்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகள் இன்னமும் வழமைக்குத் திரும்பாததினால் அப்பிரதேச மீனவர்களின் பொருளாதார நிலைமை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.அண்மையில் வடமராட்சி கரையோரங்களைத் தாக்கிய சுனாமி ஆழிப் பேரலைகளால் வடமராட்சி மீனவர்களினுடைய பெரும் எண்ணிக்கையிலான படகுகள், வலைகள், கட்டுமரங்கள், வள்ளங்கள், இழுவைப்படகுகள், படகு இயந்திரங்கள் மற்றும் பல கடற்றொழில் உபகரணங்களும் அடித்துச் சேதமாக்கப்பட்டிருப்பதுடன் அனேகமானவை அலையினால்அள்ளிச் செல்லப்பட்டுவிட்டன.

எனினும் கடற்றொழில் உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு அவர்கள் மீள தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிக்கக் கூடியளவில் கடற்றொழில் உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்க அரசோ அல்லது கடற்றொழில் அமைச்சோ எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும்எடுக்கவில்லை.

இதனால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீள தமது தொழில் நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடத் தொடங்காதநிலை உள்ளது. அத்துடன் தற்பொழுது சில மீனவர்கள் மட்டும் சேதமடைந்த கடற்கலங்களைத்திருத்தி அவற்றின் மூலம் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலைமை அப்பகுதி மக்களின் பொருளாதார நிலையை மோசமாகப் பாதித்துள்ளது. (33)

# கள்ளப்பாட்டில இருந்த சனங்கள் எல்லாம் இறால் குளத்தில சடலமாய்க் கிடந்தார்கள்

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

பகுதி -23

அ.லோகீசன்

**சுனாமிப் பேரலைகள் முல்லைத்தீவை தாக்கிய சமயம் கடல்கரையோரத்தில் அமைந்திருந்த தமது கடற்படை அலுவலகத்தில் கடமையில் இருந்து அலையுடன் அடிபட்டுப் போய் தத்தளித்து உயிர்தப்பியதுடன் தொடர்ந்து இறால் குளத்தில் நடைபெற்ற மீட்பு நடவடிக்கையிலும் பங்கேற்றிருந்தார். அவர் தான் அலையுடன் அடிபட்டுப்போனது எவ்வாறு? இறால் குளத்தில் மீட்புப்பணி எவ்வாறு இருந்தது? என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டார். யுத்தகளத்தில் தனது ஒருகாலை முழங்காலுடன் இழந்திருந்த இந்த கடற்படைப் போராளி தினேஸ் பகிர்ந்தவற்றைத் தருகிறோம்.**

**இராட்சத** அலைகள் எழும் போது நான் முல்லைக்கடல் கரை ஓரத்தில் உள்ள எங்கள் அலுவலகத்தில் இருந்தேன். எங்களது அலுவலகத்தில் இருந்து எனது வேலைகளை செய்து கொண்டிருந்தபோது 'செயின் டோசர்' வருவதுபோல பெரும் இரைச்சல் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்கும் போது டோசர் சத்தம் போலவும் தெரியவில்லை. அதனால் என்ன சத்தம் என்பதை பார்க்கவேணும் என்பதற்காக அலுவலகத்தைவிட்டு வெளியே வந்தோம்.

நாங்கள் வெளியால வருவதற்கிடையில் இந்த இரைச்சல் சத்தத்தோட சனங்கள் அவலக்குரல் எழுப்பி கத்துவதையும் எங்களால் கிரகித்துக் கொள்ள முடிந்தது. ஆக்களின் கதறல் சத்தத்தை வைத்து ஏதோ விபரீதம் நிகழ்ந்துவிட்டது என்பதை உணர்ந்து விட்டோம். வெளியில் வந்து கடலை நோக்கிப் பார்க்கின்ற வேளை மரங்கள், கட்டடங்கள் எல்லாம் விழுந்து உடைஞ்சு கொண்டு வாறத எங்கட கண்ணால நேரபாக்கக் கூடியமாதிரி இருந்தது. அதைப்பாத்து பெரிய சூறாவளி வருகுது எண்டு நினைச்சம். அதால எங்களை பாதுகாக்கிறத்துக்காக பேசுக்கு பின்னால இருக்கிறவகுப்பு மண்டபத்துக்கு போய்ச் சேந்திட்டம்.

மண்டபத்துக்கு நாங்கள் போய்ச் சேரமுதல் கடல் தண்ணி எங்களடிக்கு வந்திட்டுது. வந்ததண்ணி கொஞ்சநேரத்தில கூடி எங்களை சுத்திச்சுத்தி மேல எழுப்பிச்சுது. நாங்கள் பாத்துக்கொண்டிருக்க எங்கட வகுப்பு மண்டபம் இடிஞ்சு விழுந்தது. அந்தமண்டபம் விழுந்த உடனயுமே எங்களை தண்ணி மேல தூக்கிப் போட்டுது.

இந்தநிலைமையில யாரை யார் காப்பாற்றுறது எண்டுற பிரச்சினை ஒருத்தரையும் ஒருத்தருமே காப்பாற்ற ஏலாது. அந்தளவு அவகாசம் ஒருத்தருக்கும் இல்லை. என்னை நானே பாதுகாப்பேனோ எண்டுறதே பெரும் சிக்கலாகி விட்டது. எனக்கு நீச்சல் அனுபவம் இருக்கிறது. அதாலநான் நீந்துவன் எண்டுற முடிவெடுத்து நீந்த வெளிக்கிட்டுட்டன். எனக்கு ஒருகால் இல்லை அதால செயற்கை கால்தான் போட்டிருந்தனான் அதை கழட்டி தண்ணிக்குள்ள விட்டுட்டு நீந்த வெளிக்கிட்டுட்டன்.

இப்பிடி இருக்க என்னோட வந்த மற்றாக்கள் எப்பிடி எங்க போச்சினம் எண்டுறதே எனக்கு தெரியாமல் இருந்திச்சுது.

நான் மரத்தில எங்கயனும் பிடிச்சுக் கொண்டு நிண்டிருப்பன் நீந்துவன் எண்டுற துணிவிலதான் கால கழட்டி விட்டுட்டு நீந்த வெளிக்கிட்டனான். ஆனால் தண்ணி இப்பிடி எல்லாம் கூடும் என்ர கட்டுப்பாடு இல்லாமல் இழுத்துக் கொண்டு போகும் எண்டுறத எல்லாம் நான் சிந்திக்கவே இல்லை.

ஒரு கட்டத்தில மரங்களின்ர மேல் கொப்பு இடவெளியளுக்குள்ளால எல்லாம் செருகி அடிச்சு இழுத்துக்கொண்டு போய் ஒரு வீட்டுச்சுவரோட சேத்து மோதிச்சுது. அந்த அடியோட எனக்கு மூளை எல்லாம் கலங்கினமாதிரி இருந்தது. அதோட தண்ணி என்னை நிலத்தோட சுறுட்டிப் போட்டுது. சுறுட்டின தண்ணி என்னண்டே சொல்ல ஏலாத வேகத்தில சுறுட்டிக் கொண்டு போச்சுது. எப்பிடியும் இதில இருந்து தப்ப வேணும் எண்டு கடும் முயற்சி எடுத்து ஒரு மாதிரி மேலவந்திட்டன்.

மேல வந்து தலைநிமிரேல்ல தண்ணி பிறகும் இழுத்துக் கொண்டு போக வெளிக்கிட்டுட்டுது. இப்பிடியே இழுபட்டு போய் ஒரு வடலிக்குள்ள கொண்டுபோய் செருகிப் போட்டுது. அதுக்குள்ள இருந்து தப்புவன் எண்டு நான் நினைக்கவே இல்லை. இருந்தாலும் ஒருமுயற்சி எடுத்துப் பாத்தன். ஒருமாதிரி அதுக்குள்ளாலயும் தப்பிட்டன். எனி பிரச்சினை இல்லை எண்டு நினைச்சு ஒருக்கால் மூச்சை இழுத்தெடுத்துக் கொண்டிருக்க அப்பிடியே தண்ணி கீழ அமத்தி இழுத்துக் கொண்டு போச்சுது. எனக்கு என்ன செய்யிறது எண்டேதெரியேல்ல. இருந்தாலும் இதில இருந்து எப்பிடியும் தப்ப வேணும் எண்டுறதில உறுதியாகிட்டன்.



இப்பிடியே என்னை இழுத்துக் கொண்டு போன தண்ணி ஒரு வேலிக்குள்ள கொண்டு போய் சிக்குப்படுத்திப்போட்டுது. ஒண்டுமே செய்ய ஏலாத நிலைமை. தண்ணி எனக்கு மேல எப் பிடித் தப்புறது. ஒண்டுமே செய்ய முடியாத நிலை. மூச்சும் திணறியது. முழுப் பலத்தையும் திரட்டி கடைசி முயற்சியா இழுத்தன் ரவு சர் கிழிஞ்சு ஒரு மாதிரி அந்த கம்பிக்குள்ளயும் இருந்து வெளியால வந்திட்டன்.



வெளியால வந்தகையோட முல்லைத்தீவு ரவுணுக்குப் பின்னால இருக்கிறவயல் வெளிக்குள்ள கொண்டு போய் விட்டுது. அந்த வயல் வெளி ஒரு பெரிய கடல்மாதிரி தண்ணியால நிறைஞ்சு போய்கிடந்தது.

அதுக்குள்ள கஞ்சலுகள், குப்பையள், மரந்தடியள், படகுகள் எண்டு அளவுகணக்கில்லாத சாமானுகள் நிறைஞ்சு போய் இருந்தது. அந்தத்தண்ணி அரைப்பனை உயரமள வுக்கு நிண்டது. கால் நிலத்தில முட்டவே இல்லை. நான் பெலன்ஸ்சிலதான் நிண்ட னான். என்னால நீந்த ஏலாமல் இருந்தது. அந்தளவுக்கு களைச்சுப்போனன்.

இப்பிடி இருக்க என்னால பெலன்ஸ்சிலையும் நிக்க ஏலாமல் இருந்தது. நான் தத்தளிச்சுக் கொண்டிருந்ததை பாத்துக் கொண்டிருந்த அழகன் எண்டுற வெளிப் பெடியன் ஒருத்தன் தான் கையில வைச்சிருந்த வெறும் பெரல்ல ஒண்டை எனக்குத் தூக்கி எறிஞ்சார் அதை எடுத்தபிறகுதான் என்னால தப்ப ஏலும் எண்டுற நம்பிக்கை வந்தது.

பரல வேண்டிப் பெலன்ஸ் பண்ணிப் பிடிச்சுக் கொண்டு அங்கால எல்லா இடமும் பாத்தால் தண்ணி வட்டம் வட்டமாய் ஆடிக்கொண்டிருந்தது. சிலநேரம் கையள் மேலவந்து வந்து கீழ போய்க் கொண்டிருந்தது. சிலரது தலை மட்டும் மேல வந்து கீழ போனது சிலர் தண்ணீருக்கு மேல நிண்டே நீந்த முடியாமல் தத்தளிச்சுக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சிகளை பார்க்க எனக்கு ஏதோ செய்தது. அவர்களை காப்பாற்ற வேணும் போல இருந்தது. ஆனால் ஒன்றும் செய்யமுடியாத நிலை. என்கண் முன்னாலே எத்தனை பேர் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தத்தளிப்பதைபார்க்க எனக்கு மனம் பொறுக்கவில்லை. காப்பாற்ற வேணும் போல இருந்தது. என்னால் இயலாத நிலையிலும் முயன்று பார்த்தேன் என்னால் முடியவே இல்லை. அந்த தண்ணிக்குள் பரிதாபமாக பலர் தத்தளித்து மாண்டு போய் விட்டார்கள்.

ஒரு கட்டத்தில் தண்ணிவத்திக் கொண்டு போச்சுது அந்தநிலைமையில் ஒற்றைக் காலால் கெந்திக் கெந்தி தண்ணியோட வந்து ஒருகரையை வந்து சேர்ந்திட்டன். கரையவர எனக்கு தலைசுத்தி மயக்கம் வாறமாதிரி இருந்தது. அந்தளவுக்கு களைச்சுப் போனன். அப்பிடி இருக்க என்னை இரண்டுபேர் தூக்கிக் கொண்டு போய் கரையில விட்டுட்டினம்.

அதுக்குப்பிறகு நான் தப்பின ஆக்களை பள்ளிக்கூடங்கள்ள ஒழுங்கு படுத்தி விட்டுட்டு வந்து இறால் குளத்தில மீட்புப் பணில ஈடுபடுறம் இறால் குளம் பெரிய குளம் கரையில நிண்டு பாத்து பொடியள எடுக்க ஏலாது. அதால இரண்டு புயூஸ்ரார் படகை எடுத்து அதில இறங்கி தடியால வலிச்சு வலிச்சு உள்ளுக்க இறங்கித்தான் மீட்பில ஈடுபட்டதும்.

போட்டில உள்ளுக்கு இறங்கினால் தண்ணீக்கு மேலமிதக்கிற கஞ்சல் குப்பையள் எல்லாத்தோடையும் பொடியளும் மிதந்து கொண்டுடிருந்தது அந்தக் குளத்தில எப்பிடி இறால் இருந்ததோ அத மாதிரி சனத்தின்ர பொடியள் மிதந்து கொண்டிருந்தது. அதப்பாக்க பெரும் வேதினையாய் இருந்தது.

குளத்துக்குள்ள இருந்த பொடியள் அதாவது பெண்கள் எண்டாலும்சரி, ஆண்கள் எண்டாலும்சரி, குழந்தைகள் எண்டாலும் சரி ஒருத்தற்றை உடம்பிலையும் உடுப்பே இருக்கேல்ல. இப்பிடியே ஒரு போட்டில ஏத்தக் கூடிய பொடியள ஏத்திக் கொண்டந்து கரையில இறக்கிப் போட்டு திரும்பிப் போய் பிறகு எடுக்கிறது ஒருக்கால் பொடியளக் கொண்டந்து இறக்கிப் போட்டு போன போட் உடன அடுத்த லோட்பொடியோட திரும்பி வந்து நிக்கும். அந்தளவு பொடியள் இறால் குளத்துக்க இருந்தது. கள்ளப்பாட்டு ஏரியா சனம் எல்லாத்தையும் இறால் குளத்துக்க இருந்து தான் எடுத்தம்

குளத்துக்குள்ள இருந்து எடுக்கிற பொடியள உடன உடனயே ரக்ரறில ஏத்தி பின்னுக்கு அனுப்பிக் கொண்டிருந்தம். முதல்ல எல்லா பொடியையும் ஆண், பெண். குழந்தைகள் எண்டு பிரிச்சுத்தான் ஏத்தினநாங்கள். பிறகு அளவு கணக்கில்லாமல் பொடியள் எடுக்க எடுக்க தரம் பிரிக்காமல் எல்லாத்தையும் ஒண்டாயே ஏத்தத் தொடங்கிட்டம் அந்த இடத்தில அதத் தவிர வேற ஒண்டும் செய்யவும் ஏலாது.

எங்களை மோசமாகப் பாதித்த விடயம் அதுக்குள்ள இருந்து எடுத்த சின்னப் பிள்ளையளின்ர பொடியின்ர நிலைமை அதுகள் கிடந்த விதம் தான் எங்களால சகிக்க ஏலாமல் இருந்தது.

இறால் குளத்தில மட்டும் நாங்கள் நாலுநாள் மீட்பு நடவடிக்கை செய்து கொண்டிருந்தம் முதல்நாள் அறுபது பொடி எடுத்தம் இரண்டாம் நாள் நூற்றிஇருபது பொடி மூண்டாம் நாள் நூற்றி முப்பது பொடி, எண்டு தொகை தொகையாக எங்கட உறவுகளின்ர உயிரில்லாத உடல்களை பரிதாபமான நிலையில் இருந்து மீட்டம்.

கடல் வந்ததும் அதில் அடிபட்டுப் போனதும் இப்பிடி எல்லா இடமும் அழிஞ்சதையும் எங்கட சனத்தின்ர பொடியள் ஒவ்வொரு கோலத்தில கிடந்து எடுத்ததையும் என்னால மறக்கவே ஏலாமல் கிடக்குது. என்று தனது மீட்பு அனுபவத்தையும் பேரலையின் பிடியில் இருந்த பெரும் போராட்டத்தின் பின் தான் உயிர்தப்பிய சம்பவத்தையும் சொல்லி முடித்தார் அந்தக் கடற்படைப் போராளி.

சுனாமி அலைகளின் கோரத்தாண்டவத்தில் சிக்கி உயிர்தப்பிய உயர்தர மாணவி ஒருவரின் சோகம் நிறைந்த அந்த மாணவி எப்படித் தப்பினாள்? அவரின் பெற்றோர் என்ன ஆனார்கள்? என்பன பற்றிய தனது சோகமான அனுபவத்தை விபரிக்கிறார். அவர் விபரிக்கின்ற அனுபவத்தை அடுத்த பகுதியில் தருகிறோம்.

**தொடரும்...**

**03.**

➡ பீகார், ஜார்க்கண்ட் சட்டசபையின் முதற்கட்டவாக்கெடுப்பின் போது இடம் பெற்ற துப்பாக்கித் தாக்குதல், குண்டு வீச்சு போன்ற வன்முறைச் சம்பவங்களில் 6 பொலிசார் உட்பட 20 பேர் பலி.

➡ தமிழகக் கடலூரில் மீண்டும் சுனாமி தாக்கும் என்ற வதந்தியினால் 50 கிராமங்களிலிருந்து மக்கள் அலறியடித்து ஓட்டம்.

➡ ஈராக்கில் வெளியிடப்பட்டமுதல் கட்டத் தேர்தல் முடிவுகளில் ஷியா முஸ்லிம்களின் ஐக்கிய முன்னணி முன்னிலையில் உள்ளதாக அறிவிப்பு.

➡ ஆப்கானில் 104 பயணிகளுடன் புறப்பட்ட கம்எயாபோயிங் 737 என்ற விமானம் ஆப்கான் தலை நகரில் இருந்து 35 கிலோ மீற்றர் தொலைவில் விழுந்துள்ளது.

**04.**

➡ ஈராக்கிலுள்ள அபுகிறைப் சிறையி கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது. தொடர்பாக ஜாவல் டேலிஸ் என்ற அமெரிக்க இராணுவ வீரருக்கு நீதிமன்று 6 மாத சிறைத் தண்டனை விதித்தது.

➡ இந்தோனேஷியாவில் சுனாமி அனர்த்தத்தினால் இறந்தவர்களை நினைவு கூர்ந்து அரச முஸ்லிம் படையினர் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.



பிரார்த்தனையில்

➡ அந்தமான் நிக்கோபார் தீவுகளில் மூன்று தடவை பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 5.2 புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

➡ இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் ரயில் ஒன்று உழவு இயந்திரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 55 பேர் பலி.

**05.**

➡ சர்ச்சைக்குரிய பாதுகாப்பு வேலி அமைக்கும் இஸ்ரேலின் முயற்சியை எதிர்த்து பலஸ்தீன இளைஞர்கள் இஸ்ரேலியப் படையினர் மீது தாக்குதல்.



படையினர் மீது தாக்குதல்

➡ தெற்கு பிலிப்பைன்ஸில் நில நடுக்கம் இது ரிக்டர் அளவு கோலில்7. அலகாகப் பதிவானது.



➡ அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிசா ரைஸ் துருக்கிக்கு விஜயம் செய்து அந் நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

➡ நேபாளத்தில் சேர்பகதூர் சேபா தலைமையிலிருந்த முன்னாள் அமைச்சர்களான பிரகாஷ்மான்சிங், ஹோம்நாத்தாகால் பிமாலேந்தரா, பிரகாஷ்மகாத் ஆகியோர் கைது.

➡ ஈராக்கிலுள்ள பைஜிநகரில் அடுத்தடுத்து இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களில் 3 அமெரிக்கப் படையினர் பலி; மேலும் 12 பேர் காயம் அதேவேளை 4 ஈராக்கியர்களும் பலி.

➡ காஷ்மீர் மாநில மொகலா என்ற காட்டுப் பகுதியில் ஒளிந்திருந்த ஹிஜ்புல் முஜாகிதீன் தீவிரவாதிகளை இராணுவத்தினரும் பாதுகாப்புப் படையினரும் சுற்றி வளைத்து நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகளின் தளபதி ஹம்சாதன்யாப் சுட்டுக் கொல்லப்பட்டார்.

➡ கிழக்கு ஸ்பெயினின் கஸ்டீலோன் மாகாணத்தில் டொடோலெல்லா மலைப் பிராந்திய விடுதியொன்றில் ஏற்பட்ட வாயுக் கசிவினால்18 பேர் பலி. இச்சம்பவமானது குளிர் போக்குவதற்காக வைக்கப்பட்டிருந்த அடுப்பின் வாயு கசிவெடுத்து அறைக்குள் பரவியதால் நித்திரைசெய்து கொண்டிருந்தவர்களே இவ்வாறு பலியாகினர்.

**06.**

➡ தாய்லாந்தில் தேர்தல் இடம் பெற்றது. இதில் பிரதமர் தக்சின் ஷினவாத் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். ஒரு பிரதமர் இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடிப்பது தாய்லாந்து வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.



தேர்தல் பணியில்

➡ ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 2 பாகிஷ்தானியர்கள் சவுதியரேபியாவில் தலைதுண்டித்து கொல்லப்பட்டனர்.

➡ இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தின் உதாம் பூர் மாவட்டத்தின் ராம்பூர் எனும் இடத்திலிருந்து புறப்பட்ட பஸ் மலைப்பாதையில் இருந்து 300 அடி பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் பலி.

➡ ஈராக்கில் கையடக்கத் தொலைபேசி நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்த 4 ...கிப்திய பொறியியலாளர்கள் துப்பாக்கி ...ால் கடத்தல்.

**07.**

➡ அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசாரைஸ். இஸ்ரேலுக்கு விஜயம்

➡ ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரமான மொசூல் நகரின் மருத்துவ மனையின் மீதும் மற்றும் பகுஜா நகரத்திலும் இடம் பெற்ற இரு கார்க்குண்டுத் தாக்குதல்களில் 27 பேர் பலி; 20 பேர் காயம்.



கார்க்குண்டுத் தாக்குதல்

## கடந்த வாரத்தில்

## 03.02.2005-09.02.2005

➡ நியூசிலாந்து நாட்டின் புக்தீவுப் பகுதியின் கடற்கரையோரப் பகுதியில் 245 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி வீசியதில் கடற்கரைக் கட்டடங்கள் சேதமடைந்தன.

➡ நிக்கோபார் பகுதியிலுள்ள கமோர்டாவின் கிழக்குக் கரையோரப் பகுதியில் நில நடுக்கம். இது ரிக்டர் அளவு கோலில் 5.3 புள்ளியாக பதிவானது.

➡ இஸ்ரேலிய சிறைகளிலுள்ள பலஸ்தீனரை விடுவிக்கக் கோரி பலஸ்தீனத்தில் ஆர்ப்பாட்டம்.



ஆர்ப்பாட்டம்

**08.**

➡ .ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஈராக் தேசிய பாதுகாப்புப் படைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நிலையமொன்றின் மீது தற்கொலைக் குண்டுதாரியொருவர் நடத்திய தாக்குதலில் 15 பேர் பலி; 12 பேர் காயம்.

➡ இஸ்ரேல்- பலஸ்தீன பிரச்சினைக்கு சமாதானப் பேச்சின் மூலம் தீர்வைக் காணும் பொருட்டு இரு நாட்டுத்தலைவர்களும் யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர்.



இணக்கப்பாட்டின் மகிழ்வில்

➡ ஈராக்கில் 20 பாரஊர்தி ஓட்டுநர்களும் 4 பொலிசாரும் பாரஊர்திகளுடன் தீவிரவாதிகளால் உயிருடன் கொளுத்தப் பட்டனர்.

**09.**

➡ பசுபிக் கடலின் தென் மேற்குப் பகுதியில் உள்ள வாகாட்டோ 93 தீவுகளைக் கொண்ட இந்த நாட்டில் தலைநகர் போர்ட் விலாவுக்கு வட மேற்குப்பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் மக்கள் கரையோரங்களை விட்டு வெளியேற்றம். இது ரிக்டர் அளவு கோலில் 6.7 புள்ளியாக பதிவாகியது.

➡ .ஈராக்கில் அமெரிக்காவின் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட அராபிய தொலைக்காட்சியின் செய்தியாளரும் அவரது 8 வயது மகனான "கறா"்ரும் ஈராக் கின் தென்பகுதி நகரான ப்ஸ்ராவில் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை.

➡ குவைத்தில் அமெரிக்கப்படையினர் மற்றும் வெளிநாட்டவர்கள் கடத்தலில் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த கிளர்ச்சி வாதத் தலைவர் "அமர்கலாப் அல் எனிசி" என்பவர் மாரடைப்பால் மரணம்.

➡ கொலம்பியாவின் வடமேற்குப் பகுதியில் பின்தங்கிய காட்டுப்பகுதியில். இராணுவத்தினருக்கும் மாக்சிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 17 படையினர் பலி ; 8 இராணுவச்சிப்பாய்கள் காணாமற் போயுள்ளனர்.

➡ நேபாளத்தின் தலைவர் காத்மண்டுவிலிருந்து 600 கிலோ மீற்றர் மேற்கே கயிலாலி மாவட்டச்சிறையில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல்நடத்தி சிறையில் இருந்த 166 கைதிகளை மீட்டுள்ளனர். இதன் போது 5 பொலிசார் பலி ; 4 பேர் படுகாயம்; தீவிரவாதி ஒருவரும் பலி.

# க.பொ.த.(சா/த) பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

2004 ஆம் ஆண்டு க.பொ.த (சா/தர) பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுக்காக காத்திருக்கும் பரீட்சார்த்திகள் அனைவரும் தங்கள் பரீட்சைப் பெறுபேறு கிடைக்கப்பெற்றதும் க.பொ.த.உயர் தரத்தில் கற்கவிருக்கும் பாடத்துறையைத் தெரிவு செய்வதற்கான ஓர் வழிகாட்டல் செயலமர்வுநாளை 15ஆம்திகதிஅன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் உடையார்கட்டு மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இவ்வழிகாட்டல் செயலமர்வில் க.பொ.த. சாதாரணதரத்திற்கு தோற்றிய அனைவரும் தங்கள் வசதியைக் கருத்தில் கொண்டு விரும்பிய நிலையம் ஒன்றில் தங்கள்வரவினை ஏற்படுத்தி வழிகாட்ட லினைப்பெற்றுச் செல்லலாம் என முல்லை மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.சிவராசா தெரிவித்துள்ளார். (சோ)

# ஆசிரியர் நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

தொழிலற்ற பட்டதாரிகளை பயிற்சிக்காக இணைக்கும் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இடம் பெறவுள்ளது எனவே மேற்படி பயிற்சிக்காக இணைக்கப்பட்ட ஆசிரியர்களை அன்றையதினம் மேற்படி கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் முல்லை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா வேண்டியுள்ளார். (சோ)

# திருமலை சிங்களக் குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

(திருகோணமலை)

தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்டச் செயலகம், திருகோணமலை நகரில் மட்கோவ் பகுதியைச் சேர்ந்த பதினைந்து சிங்களக் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது. இக் குடும்பங்கள் திருமலை நகரில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட அலுவலகத்திற்கு வந்து நேரடியாக நிவாரண உணவுப் பொதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை மாவட்டப் பிரமுகர் சி.குமரகுருபரன், நிர்வாக அதிகாரி வி.கலைவர்ணன் ஆகியோர் பொதிகளைக் கையளித்தனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்கனவே கொரியவத்த லவ்லேன் மற்றும் பகுதிகளைச் சேர்ந்த கடற்கோளினால் பாதிக்கப்பட்ட சிங்கள முஸ்லிம் மக்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது. இன, மத, மொழி வேறுபாடின்றி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாக அதிகாரி கலைவர்ணன் தெரிவித்தார்.

(25)

# கொபி அனானின் அறிக்கைக்கு அரசு விரைவில் பதிலளிக்கும்

**- சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்**

(கொழும்பு)

கௌசல்யன் குழுவினர் மீதான படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஐ.நா பொதுச் செயலர் கொபி அனான் விடுத்திருந்த அறிக்கை குறித்து தமது அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும், இது குறித்து அரசாங்கம் பின்னர் பதிலளிக்கும் என சிறிலங்காவின்வெளியுறவுஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் ஏனையோரும் கடந்தவாரம் கொல்லப்பட்டமை குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் விடுத்த கண்டன அறிக்கைக்கு சிறிலங்கா அரசாங்கம் அதிருப்தி தெரிவிக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தைச் சேர்ந்த சங்கைக்குரிய எல்லே குணவன்ச தேரர் கேட்டுள்ளதற்குப் பதிலளிக்கையிலேயே கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் வெளியுறவுஅமைச்சர்லக்ஷ்மன்கதிர்காமரை நேற்றுமுன்தினம் அவரது இல்லத்தில் சந்தித்து இந்த மனுவைக்கையளித்தனர். இதே மனுவை இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளிடமும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர் கையளித்துள்ளனர்.

இந்த மனுவில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டமையைக் கண்டித்து கொபி அனான் விடுத்த அறிக்கை குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. பல நாடுகளால் தடை செய்யப்பட்டுள்ள பயங்கரவாத அமைப்பான விடுதலைப்புலிகள் இயக்கம் குறித்து இத்தகைய அறிக்கையொன்றை விடுப்பது தனியான விடுதலைப்புலிகளின் அரசாங்கம் ஒன்றை அங்கீகரிப்பது போன்றதென்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அரசாங்கசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உலக வங்கி, சர்வதேசதொழில் நிறுவனம், சர் வதேச நாணய நிதியம் என்பனவும் விடுதலைப்புலிகளுடன் தனியான நிகழ்ச்சி ஒன்றை வைத்து செயற்படுவது பற்றியும் இந்தச் சந்திப்பின் போது சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

## சுனாமியால் உயிர் தப்பிய 80 குழந்தைகளைக் காணவில்லை!

சுனாமியினால் உயிர் தப்பிய 80 குழந்தைகள் காணாமல் போயுள்ளதாகசிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.இந்தக் குழந்தைகள் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இவர்கள் முகாம்களில் இருந்தே காணாமல் போயுள்ளதாகவும், சுனாமி ஏற்பட்ட தினத்தில் மேலும் பல குழந்தைகள் இவ்வாறு கடத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்திருப்பதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்வதற்கு விசேட பொலிஸ் கு ழு ஒன்று பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவால் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


## கிளிநொச்சி வரை மின்சாரக்கட்டமைப்பை விரைவில் மறுசீரமைக்க ஜப்பான் உதவும்

**ஜப்பானியத் தூதுவர் தெரிவிப்பு**

(கொழும்பு)

வவுனியா கிளிநொச்சி வரையிலான மின்சாரக் கட்டமைப்பை மறுசீரமைப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்க ஜப்பான் தீர்மானித்துள்ளது. இதற்காக ஜப்பான் 1278 மில்லியன் ரூபாவை கடன் உதவியாக வழங்க முன்வந்துள்ளது வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை மின்கட்டமைப்பை நிர்மாணிப்பதுடன் கிளிநொச்சியில் உப மின்சார நிலைமொன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் தொடக்கம் 2007 ஆம் ஆண்டுவரையான மூன்று வருட காலத்திற்குள் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கடன் உதவியானது இரண்டு வருட சலுகையுடன் 40 வருட காலத்திற்குள் மீளச் செலுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில்

1982 * 02 * 21

மண்ணின் மடியில்

2004 * 02 * 14

அமரர்

**கணபதிப்பிள்ளை மகாலிங்கம்**

வண்ணாகுளம்
அடம்பன்

ஓராண்டு என்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
மறப்போமா உம் நினைவை
உம் பிரிவால் துயர் கொள்ளும்
மனைவி மகன் தாய் சகோதரர்கள்.

தகவல்
மகன் (மதுஷன்)
வண்ணாகுளம்
அடம்பன்.

(சி-11416)

# கேள்வி அறிவித்தல்

## விடுதி திருத்தி அமைப்பதற்கான கேள்வி கோரல்

## பிரதேச செயலக விடுதி – பச்சிலைப்பள்ளி

மேற்குறித்த வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் கிளி. மாவட்ட செயலக கேள்விச் சபையால் கோரப்படுகின்றது. இக் கேள்விக்கு பெறுமதி சேர்வரியில் தங்கள் பெயரைப் பதிவு செய்து (VAT) இலக்கத்தினைப் பெற்றுக் கொண்டதும் இலங்கை தேசிய நிர்மாணிகள் ஒப்பந்தக்காரர் சங்கத்தில் உறுப்பினருமாகிய தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும்/ நிறுவனங்களும்/ சங்கங்களும் மட்டுமே கேள்வி கோர முடியும்.

இது சம்பந்தமான விபரங்கள் அலுவலக நேரத்தில் செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்

கேள்விப் பத்திரங்கள் 25.02.2005 நண்பகல் 12.00 மணிவரை கிளி/மாவட்ட செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு நாள் 28.02.2005 காலை 10.00 மணி வரை.

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபரும்**
**கிளி/மாவட்ட கேள்விச் சபைத்தலைவரும்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-11332)

## அறிவித்தல்

**வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூ.சங்கம் பரந்தன், கிளிநொச்சி.**

## பதவி வெற்றிடம் (தற்காலிகம்)

வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 2005-02-28ஆம் நாளாகும். விண்ணப்ப படிவங்கள் காரியாலயத்தில் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| பதவி | | வெற்றிடம். |
|---|---|---|
| 01. சாரதி (உழு பொறி பெட்டியுடன்)ரக்ரர் | - | 06 |
| சாரதி ( கனரக வாகனம், பேருந்து, பாரவூர்தி ) | - | 05 |
| 02. அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் (தமிழ், ஆங்கிலம், சிங்களம் மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராகவும், மொழிபெயர்ப்புச் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்) | - | 01 |
| 03. காவலாளி (8ஆம் வகுப்பு சித்தி ) | - | 03 |

சம்பளம் :- அவரவர்களின் தகுதிக்கேற்ப நேரில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு** :- (சாரதி:– தமிழீழ போக்குவரவுக் கழக உரிமம், சிறிலங்கா போக்குவரத்து ஆணையாளரின் உரிமம் என்பன வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் சிங்களம் பேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இவ்வண்ணம்
பொதுமுகாமையாளர்,
வ.பி.பா.ஊ.உ.கூ.சங்கம்,
பரந்தன்.

( சி.11330 )

# 51 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
13 - 04 - 1967

மறைவு
26 - 12 - 2004

**ஜோதி**

ஜோதி வடிவே
எங்கள் அத்தானே
ஊருக்குள் தண்ணி
ஓங்கி வருகையிலே
தப்பிக்க எண்ணி
தலை தெறிக்க ஓடி
மாட்டிக் கொண்டதேன்
மகிழ்ந்து பேசிய மகன்
மழலை பேசிய மகள்
பாங்காய் வாழ்ந்த
மனைவி பதறி அழுகின்றாளாம்
பாரினிலே....

நா.சபாரட்னம்
7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(5719)

உங்கள் பிரிவால் துயருறும்
மகன், மகள், மனைவி, மச்சான்மார்,
மச்சாள்மார், துங்கைமார்,
மாமா,மாமி.

நெடுஞ்சாலைகள் அமைச்சு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம்

(CAARP)

திட்ட முகாமைத்துவப்பிரிவு (PMU)

# பதவிகளுக்கான வெற்றிடங்கள்

திட்ட முகாமைத்துவ பிரிவானது (PMU) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்திற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் திறைசேரியின் முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல.10 அளிப்பின் கீழ் அமைக் கப்பட்டது.

திட்ட முகாமைத்துவப்பிரிவினால் வவு னியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணியாற்றுவதற்குக் கீழ்வரும் 1பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**திட்ட பொறியியலாளர் (Project Engineers)**

B.Sc. பொறியியல் (சிவில்) பல்கலைக்கழக பட்டத்துடன் 1வருட வீதி வேலை அனுபவம் அடங்கலாக 3 வருடங்கள்அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

2.

**பொறியியலாளர்கள் (பட்டதாரிகள்) ( Engineers)**

B.Sc. பொறியியல் (சிவில்) பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

3.

**திட்ட செயலாளர் (Project Secretary)**

அ. க.பொ.த. (சா/த) இல் இருதடவைக்கு மேற்படாது மொழி, கணிதம் அடங்கலாக நான்கு திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட கல்வியியல் நிறுவன மொன்றில் செயலாளர் பதவிக்கான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு ஆங்கிலத்தில் சரளமாகவும், காரியாலய தொடர் பாடல்களை சுயாதீனமாகக்கையாளவும், கணனியில்வின்டோஸ் மென்பொருள் அடிப்படையில் இங்கும் கணனி மென்பொருட்களை இயக்குவதில் சிறந்த தேர்ச்சியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ. அதிகாரப்பத்திரம் பெற்ற செயலாளருக்கான (Charted Secretary) கல்வியினை தொடர்பவராகவும் கணனியில் வின் மென்பொருள் அடிப்படையில் இயங்கும் கணனி மென்பொருட்களை இயக்குவதில் சிறந்த தேர்ச்சியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

03. வருடங்கள் குறிப்பிடப்பட்ட வேலையில் அனுபவமும் பெற்றிருத்தல்வேண்டும்.

**04. கணனி இயக்குனர் /இலிகிதர் (Computer Operator / Clerk)**

க.பொ.த (சா/த) இல் இருதடவைக்கு மேற்படாது மொழி, கணிதம் அடங்கலாக நான்கு திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு கணனிக் கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழுடன் 01 வருட தொழில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

**05. காரியாலய உதவியாளர் (Officer Aide)**

க.பொ.த. (சா/த) இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**06. காவலாளர் (Watcher)**

08ஆம் தரம் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

**வயது எல்லை**

18-50

**வேதனம்**

பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொழில் நிபந்தனைகள்**

நியமனங்களானவை (3) மூன்று வருட காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

**வேறு அனுகூலங்கள்**

பி.எம்.யு மூலம் 12% மும் ஊழியரின் மூலம் 8% மும் ஊழியர் சேமலாப நிதிக்காக வழங்கப்படுவதோடு, மேலும் 3% ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக் கொத்துடன் **Project Director (ADB Project), P.O.Box 62, Battaramulla.** என்ற முகவரிக்கு 28.02.2005 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும தொழிலினை குறிப்பிடுவதோடு தற்போது அரசாங்க திணைக்களங்களில், கூட்டுத்தாபனங்களில், சபைகளில் மற்றும் அதிகாரசபைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளாயின் குறிப்பிடப்பட்ட நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**திட்டப்பணிப்பாளர்**
**ஆசிய அபிவிருத்தி வங்கிதிட்டப் பிரிவு,**
**03ஆம் மாடி "செத்சிரிபாய"**
**பத்தரமுல்லை**

(சி11333)

## சிறுபான்மையினரைப் பாதுகாக்க புதிய சட்டம் தயாராகிறது

மதக்கலவரத்தை ஒடுக்கவும் சிறுபான்மையினருக்குப் பாது காப்பு அளிக்கவும் கடுமையான சட்டம் தயாராகி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் சிவ ராஜ் பட்டேல் தெரிவித்தார்.

மாநில சிறுபான்மை அமைப்புக் களில் 4 ஆவது ஆண்டு மாநாடு டில்லியில் கடந்த வியாழன் தொடங்கியது. மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட் டேல் பேசியதாவது;

நாட்டில் மதக்கலவரம் தூண் டப்பட்டு சிறுபான்மையினர் தாக் கப்படுகிறார்கள். 1984 இல் டில்லி யில் சீக்கியர்களுக்கு எதிராக நடந்தது போன்றோ, குஜராத்தில் கோத்ரா ரயில் எரிப்பு, சம்பவத்தைத் தொடர்ந்து சிறுபான்மையின ருக்கு எதிராக நடந்தது போன்றோ இன்னொரு கலவரம் நடப்பதை அனுமதிக்க முடியாது.

மதக்கலவரத்தைத் தூண்டி சிறுபான்மையினரைத் தாக்கு வோர் மீது நடவடிக்கை எடுக்கக் கடுமையான சட்டம் கொண்டு வரப்படும். சட்டத் துறையின் உதவியோடு அப்படி ஒரு சட்டத்தை இயற்றும் முயற்சியில் மத்திய உள்துறை அமைச்சகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## சங்க ராச்சாரியர்கள் நீதிமன்றில் ஆஜர்

சங்கரராமன் கொலை தொடர் பாக காஞ்சிமட சங்கராச்சாரிகள் இருவரும் கடந்தவியாழக்கிழமை காஞ்சி நீதிமன்றில் ஆஜரா னார்கள்.

இவ் வழக்கு தொடர்பாக 25 பேர்கைது செய்யப்பட்டனர் இதில் ஜெயேந்திரர் உச்சநீதிமன்ற பிணை யில் செல்லஅனுமதிக்கப்பட்டார் இந்த நிலையில் சங்கரராமன் கொலை வழக்கில் கைதான அனைவரையும் கடந்த வியாழக் கிழமைநீதிமன்றில் ஆஜராகும் படி உத்தரவிடப்பட்டிருந்தது. இதற் கமைய ஜெயேந்திரர் சகாக்களு டன் சென்னைச்சிறையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் உயர் நீதி மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

# நீங்காத நினைவலைகள்

## 51 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்! கடந்த 26.12.2004 அன்று ஆழிப்பேரலையின் அனர்த்தத்தில் சிவபதம் அடைந்த எமது குடும்பத்தினரான




**மலர்வு:-**

| | |
|---|---|
| இ.அமராவதி | 01.07.1961 |
| நா.ஜெயமதி | 02.07.1976 |
| நா. தாரணி | 04.02.1993 |
| நா.தமிழினி | 01.04.1999 |
| நா. தயாழினி | 14.07.2003 |
| ஜெ. மிதுஷன் | 18.03.2000 |

பச்சை பசுஞ்சோலை பாலைவன மானதே
பூத்துக்குலுங்கிய பெரு விருட்சம் வேரற்று
வீழ்ந்ததே தளிர்களோடு கனியோடு நின்ற
தோப்பு தனிமரமானதே விழியோரம் விழிநீர்
பாசப் பசியோடு உங்கள் அன்பு முகம் தேடி
ஓடுகின்றேன் ஒரு முறையேனும் அப்பா

என்றணைக்க மறு முறையேனும் பிறப்பெடுத்து
வாருங்கள் என் செல்வங்களே எம் வேதனையால்
துடிக்கும் தீயணைக்க அந்த பாச மழையிலே
முன்போல நாமெல்லாம் உன்று குளிக்க என
இறைவனை இறைஞ்சுகின்றோம் இம் மடலை உங்கள்
காலடியில் காணிக்கையாக்கி.

51ஆம் நாள் நிகழ்வு 14.02.2005 திங்கட்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வடமராட்சி கிழக்கு,
உடுத்துறை, வடக்கு

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

(5725)

# லெப்.கேணல் பொன்னம்மான் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவில்



வீரத்தின் வித்தே விடுதலையின் விடிவிளக்கே
வல்லபுலித்தலைவரின் சொல்லசைவில் அணிவகுத்து
நடந்த தேசத் தூண்கள் தேசம் தாங்கிய போதெல்லாம்
விழித்தெழுந்து வீறுடனே செயற்பட்ட விடுதலை வீரர்கள்
வெடிமருந்து துறையில் விருப்புடனே செயற்பட்டு
பகைக்கு பல பாடம் புகட்டிய வீரன்-எம் பொன்னம்மான்
மங்காப் புகழ் கொண்ட எம் தலைவரின் காலத்தில்
மகளிர் படையணிக்கு அடித்தளம் இட்ட பயிற்சி ஆசான்
தலைவரின் கருத்துடனே வெடிமருந்து கொண்டு எதிரி குகை தகர்த்திட
மறத்தமிழ் வீரர்களை மண்ணுக்காய் நாம் கொடுத்தோம்
விடுதலையை நேசித்து சுழன்று அடித்த புயல்களில்
மேஜர்.கேடில்ஸ், கப்டன்.வாசு, லெப்.சித்தார்த்தன், 2 ஆம் லெப்.பரன்,
வீரவேங்கைகளான அக்பர், கவர், தேவன், குமணன், யோகேஸ் இவர்களுடன்
பக்கதுணையாகப் பணியாற்றி சாவடைந்த எம் இனிய மக்களையும் இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.



லெப்.கேணல் பொன்னம்மான்
கண்ணிவெடிப்பிரிவு.

(5684)

இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ. பே:021-228 5852,5077

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)

# நியாப் II-முல்லை மாவட்டம்
# சமூகவலுவூட்டாளர்களை மையக்கிராமங்களில் அறிமுகம் செய்து நியாப் -IIவேலைத்திட்டங்களை ஆரம்பித்தல்

கீழ் வரும் அட்டவணைப்படி நடைபெறவுள்ள நியாப்-II திட்டத்தின் தொடக்க நிகழ்விற்கும், சமூகவலுவுட்டாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்விற்கும் இவ்மையக்கிராமங்களின் அபிவிருத்தியில் சம்பந்தப்பட்ட சகல அரச உத்தியோகத்தர்களையும், பொது அமைப்புக்களையும், பொதுமக்களையும் கலந்துகொள்ளும் வண்ணம் தயவுடன் அழைக்கின்றோம்.

| திகதி நேரம் | 15.02.2005 | 16.02.2005 | 17.02.2005 | 22.02.2005 | 23.02.2005 | 24.02.2005 | 25.02.2005 |
|---|---|---|---|---|---|---|---|
| காலை 9மணி | நட்டாங்கண்டல் | திருமுறிகண்டி | பனிக்கன்குளம் | தேவிபுரம் | ஆறுமுகத்தாகுளம் | தண்டுவான் | புலிமச்சிநாதகுளம் |
| காலை 11மணி | ஆலங்குளம் | நீதிபுரம் | கற்குவாறி | இளங்கோபுரம் | முறிப்பு | பழம்பாசி | |
| மாலை 3மணி | உயிலங்குளம் | அம்பாள்புரம் | கரிப்பட்டமுறிப்பு | இரணைப்பாலை | புதறிகுடா | சிவநகர் | |
| மாலை 4மணி | அனிஞ்சியன்குளம் | வன்னிவிளாங்குளம் | பெரியஇத்திமடு | மந்துவில் | முள்ளியவளை கிழக்கு | சின்னச்சாளம்பன் | |

எந்திரி ச.சு.சிவகுமார்
பிரதித் திட்டப்பணிப்பாளர்,
நியாப்-முல்லைத்தீவு.

(சி-11421)

# தமிழீழ நுண்கலைக்கல்லூரி
# பரீட்சைத்திட்ட அறிமுகம்

தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்பட இருக்கும் மாவட்ட நுண்கலைக்கல்லூரிகளில் கீழ்வரும் ஒழுங்கமைக்கப்பட்ட பாடவிதானப்படி பரீட்சைகள் மற்றும் கலைப்பயிற்சி நெறிகள் என்பன நடைபெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரே காலப்பகுதியில் பாடசாலைக்கல்வியையும், கலைத்திறன் தேர்ச்சிக்கல்வியையும் பெற இந்நுண்கலைக்கல்லூரிப்பாடத்திட்டம் தமிழீழ மாணவர்களுக்கு வழிவகுக்கின்றது நுண்கலைக்கல்லூரிகளில் வருட ஆரம்பங்களில் நேர்முகத்தேர்வுகளின் மூலம் கலைப்பயிற்சி பெறுவோர் இணைக்கப்படுவர். பத்துப்படிமுறைகளின் அடிப்படையில் அல்லது தரங்களின் அடிப்படையில் பரீட்சைகள் நடைபெறும்.

## படிமுறைகளும், பாடவிதானப்பிரிப்புகளும்

01. படிமுறை - 01- செயன்முறை, அறிமுறை.
02. படிமுறை - 02- செயன்முறை, அறிமுறை.
03. படிமுறை - 03- செயன்முறை, அறிமுறை.
04. படிமுறை - 04- செயன்முறை, அறிமுறை, தமிழ்
05. படிமுறை - 05- செயன்முறை, அறிமுறை, தமிழ்
06. படிமுறை - 06- செயன்முறை, அறிமுறை, தமிழ், ஆங்கிலம்
07. படிமுறை - 07- செயன்முறை, அறிமுறை, தமிழ், ஆங்கிலம் கலைப்பண்பு (ஆற்றுகைத்திறன் பகுதி)
08. படிமுறை - 08-செயன்முறை, அறிமுறை, தமிழ், ஈழத்தமிழர் கலைகள், உளவியல், உபபாடம்
09. படிமுறை - 09 - அவைக்காற்றுகை, ஆய்வுக்கட்டுரை
10. அரங்கேற்றம்.

### குறிப்பு:-

01.1ஆவது படிமுறை முதல் 6ஆவது படிமுறை வரை பரீட்சார்த்தி தனது தெரிவு செய்யப்பட்ட கலைத்துறையின் உச்ச அறிவைப்பெறக் கூடிய பாடத்திட்டமாக அமையும்.

02.7ஆவது படிமுறை ஆற்றுகைத்திறன் பகுதியாகும். இந்த ஆற்றுகைத்திறன் பரீட்சைமூலம் பரீட்சார்த்தி தான் தெரிவு செய்யும் கலைத்துறையில் அதி உச்ச ஆற்றுகைத்திறன் அறிவைப்பெறக் கூடியவராகப் பயிற்றுவிக்கப்படுவார். எமது தாயகத்தின் புகழ் பு.த்த கலைஞர்களைக் கொண்டும், சிறப்பாக அழைக்கப்படும் பிரபல்ய கலைஞர்களைக் கொண்டும் இவ் ஆற்றுகைத்திறன் பரீட்சார்த்தி பயிற்றுவிக்கப்படுவார்.

03. **8ஆவது படிமுறை-ஆசிரியர் தரமாகும்.**

நுண்கலைகளைப் பொறுத்தளவில், தமது கலையில் அதிசிறந்த ஆற்றுகையாளராக இருக்கக் கூடிய ஒருவரே சிறந்த ஆசானாகவும் இருக்க முடியும். ஒரு முழுமையிலிருந்தே இன்னொரு முழுமை உருவாக முடியும். எனவே ஆற்றுகைத்திறன் பகுதியின் பின் ஆசிரியர் தரம் வைக்கப்படுகின்றது.

04. **9ஆவது படிமுறை அவைக்காற்றுத் தேர்வுப்பகுதி.**

இதில் பரீட்சார்த்தி தமது துறைசார்ந்த ஆற்றுகை ஒன்றை ஒரு மணித்தியாலம் நிகழ்த்திக்காட்ட வேண்டும். அத்துடன் நூறு பக்கங்களுக்குக் குறையாது ஆய்வுக்கட்டுரை ஒன்றையும் தரப்படும் தலையங்கத்தை வைத்து எழுதி சமர்ப்பிக்க வேண்டும். இதில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றால் அவருக்கு "இசைக்கலைச்சுடர்" அல்லது "நாட்டியக் கலைச்சுடர்" என்றும் பட்டம் வழங்கப்படுவதற்கு அவர் தகுதி உடையவராகின்றார். இச்சான்றிதழ் தமிழீழத்தின் கலைசார்ந்த தெரிவுகளுக்கு முக்கிய ஆவணமாகக் கருதப்படும்.

05. **மாணவர் சேர்க்கப்படும் விதம்.**

மாவட்ட நுண்கலைக்கல்லூரிகளின் 1ஆவது படிமுறையில் இணைவதற்கு ஆகக் குறைந்தது 8 வயதை மாணவர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். 7 ஆவது படிமுறைத் தேர்வுக்கு (ஆற்றுகைத்திறன் பகுதி) க.பொ.த. சாதாரணதரம் சித்தி பெற்றிருக்க வேண்டும். 8 ஆவது படிமுறைக்கு மேல் க.பொ.த. உயர்தரம் ஏதேனும் ஒரு பிரிவில் சித்தி பெற்றால் போதுமானது. மாணவர்கள் நேர்முகத்தேர்வின் மூலமாகவே இணைக்கப்படுவர்.

06. வட இலங்கை சங்கீத சபைத்தேர்வில் 4ஆம் தரம் சித்திபெற்றோர் நுண்கலைக்கல்லூரியின் 5ஆவது படிமுறையிலிருந்து கற்கையைத் தொடரலாம். வ.இ.ச.சபைப் பரீட்சையில் ஆசிரியர் தரம் சித்தி பெற்றோரும், யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றோரும் 7 ஆவது படிமுறையான ஆற்றுகைத்திறன் பகுதிக்கும், அவைக்காற்றுத் தேர்வுப்பகுதிக்கும் தோற்றி, பட்டம் பெறலாம்.

பணிப்பாளர்,
தமிழீழ நுண்கலைக்கல்லூரி.

(சி-11317)

# முரளிதரன் ரொம்ப நல்ல மனிதர் உருகுகிறார் புதுநண்பர் வோர்ன்



முரளிதரன் ரொம்ப நல்ல மனிதர். பந்தை எறிவதாக அவர் மீது சுமத்தப் படும் குற்றச்சாட்டுக்கள் தவறானவை" இப்படி ஐஸ் போடுபவர்... முரளிதரனின் புது நண்பர் ஷேன்வோர்ன்.

முரளிதரன் ரொம்ப நல்லவர். அவரது சுனாமி நிவாரணப் பணிகள் பாராட்டப்பட வேண்டியவை. என்னைப் பொறுத்தவரை இலங்கை என்றாலே... முரளிதரன். அவரது முகம்.... கறுத்த பெரிய கண்கள் எனக்கு இலங்கை மக்களை நினைவுக்குக் கொண்டு வரும். பந்தை எறிவதாக அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் தவறானவை. அவர் பந்து வீசும் முறையில் சிறிய வித்தியாசம் இருக்குமே தவிர பந்தை எறிவதில்லை. நானும், அவரும் இங்கு நிவாரணப் பணிகளுக்கு இடையே கிரிக்கெட் பற்றி, சுழற் பந்து வீச்சுப் பற்றி நிறையப் பேசுகிறோம். பந்து வீசுவதற்கு மிகவும் சிரமமான துடுப்பாட்ட வீரர் யார் என்பதில் எங்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கிறது. லாறா என்கிறார் முரளி. சச்சின் என்கிறேன் நான். இவ்வாறு தெரிவித்துள்ளார் வோர்ன்.

# ஒரு நாள் போட்டியில் 400 ஓட்டம் பெற்ற முதல் அந்தஸ்தை அவுஸ்திரேலியா பெறவேண்டும்



புக்கான

34 ஆண்டு கால ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் 400 ஓட்டங்களைக் கடக்கும் முதல் அணி என்ற பெயர் அவுஸ்திரேலியாவுக்குக் கிடைக்க வேண்டும். இந்த இலக்கை நோக்கி இப்போது பயணத்தை ஆரம்பித்துள்ளதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜோன் புக்கானன் தெரிவித்துள்ளார்.

இந்த இலக்கை அடைவோம் என்ற நம்பிக்கை எனக்கும் பொண்டிங்கிற்கும் நிறையவே உண்டு. ஏனெனில் உலகத் தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் எங்களிடம் இருக்கிறார்கள். நிச்சயம் இந்த இலக்கை எட்ட முடியும். எங்கள் வீரர்கள் மனதில் இந்த விடயத்தை பதிய வைத்துவிட்டோம். வீரர்கள் சந்திப்பு நடக்கும்போது அங்கிருக்கும் அறிவிப்புப் பலகைகளில் இந்த விடயத்தைப் பெரிய எழுத்துக்களில் எழுதி வைத்திருப்போம். இந்த இலக்கை அடைவதற்கு முதல் 30 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 200 ஓட்டங்களுக்கு மேல் குவித்து வலுவான அடித்தளம் உருவாக்க வேண்டும். அத்துடன் தொடக்க ஆட்டக்காரர்களில் ஒருவர் கடைசி வரை ஆட்டமிழக்காது விளையாட வேண்டும். கடந்த காலங்களில் எங்கள தொடக்க ஆட்டக்காரர்கள் நெப் மார்ஷ் இப்படி விளையாடுவார். ஆனால் ஆட்டம் முடியும் போது அதிகபட்சம் அவர் 130 ஓட்டங்கள் எடுத்திருப்பார். அது போதாது. குறைந்த பட்சம் 150 ஓட்டங்களையாவது கடந்திருக்க வேண்டும் அல்லது ஒரு நாள் போட்டிகளில் இரட்டைச் சதம்அடித்த முதல் துடுப்பாட்ட வீரர் என்ற சாதனை படைத்தாலும் சரிதான். விக்கெட்டுக்களுக்கு இடையே ஓடி ஓட்டம் எடுக்கும் வேகத்தை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் பத்து இருபது ஓட்டம் இன்னும் கூடுதலாக வரும்.

# பாகிஸ்தானுக்கு வெற்றி வாய்ப்பு இல்லை

## பாக். அணியின் முன்னாள் தலைவர் மஜீத்கான்

"இந்திய சுற்றுப் பயணத்தில் பாகிஸ்தானுக்கு வெற்றி வாய்ப்புக்கள் இல்லை" என்கிறார் பாக். அணியின் முன்னாள் தலைவர் மஜித்கான்.

"கடந்த நான்கு ஆண்டுகளாக பாகிஸ்தான் அணியின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை. வெற்றியை நிர்ணயிக்கும் ஒரு அணியை தேர்வு செய்வதில் பெரிய குழப்பமே நிலவுகிறது. இந்திய சுற்றுப் பயணத்தில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் வெல்லும் வாய்ப்புக்கள் பாகிஸ்தானுக்கு பிரகாசமாக இல்லை. இந்திய அணியைப் பொறுத்தவரை வெற்றிக்கான முழுத்தகுதியுடன் திகழ்கிறது. டெஸ்டில் 20 விக்கெட்டுக்கள் வீழ்த்தும் பந்து வீச்சாளர்கள், நீண்ட நேரம் நின்று ஆடும் துடுப்பாட்ட வீரர்கள் இந்த அணியில் உள்ளனர். அவுஸ்திரேலிய தொடரில் எங்கள் அணி யின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இந்திய தொடர் இது போல இருக்க வாய்ப்பில்லை என்றாலும் துடுப்பாட்டம் கவலையளிப்பதாகவே உள்ளது என்கிறார்.

# பாகிஸ்தான் அணியை குறைத்து மதிப்பிட வேண்டாம்; சிங்கம் போன்ற மனவுறுதியுள்ள வீரர்கள் அணியிலுள்ளனர்



## இன்சமாம் எச்சரிக்கை

"பாகிஸ்தான் கிரிக்கெட் அணியைக் குறைத்து மதிப்பிட வேண்டாம்" என அந்த அணித் தலைவர் இன்சமாம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வரும் 25ஆம் திகதி இந்தியா செல்கிறது. இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையே மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டி நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணி வரும் 18ஆம் திகதி அறிவிக்கப்படும்.

இதற்கிடையில் இந்தியாவில் நடைபெறும் ஒரு விளம்பர படப்பிடிப்பில் கங்குலியுடன் இணைந்து பங்கேற்பதற்காக பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சாமம் நேற்று முன்தினம் இந்தியா வந்தார். முன்னதாக அவர் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது,

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்யவிருக்கும் பாகிஸ்தான் அணியின் இளம் மற்றும் புதுமுக வீரர்கள் இடம்பெற்றிருப்பதால் குறைத்து மதிப்பிட வேண்டாம். சிங்கம் போன்ற மன உறுதி படைத்த வீரர்கள் அணியில் உள்ளனர். மிக முக்கியமான இந்தப் போட்டித் தொடரில் சிறப்பாக ஆட முழு ஈடுபாட்டையும் காட்டுவார்கள்.

1987 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் இந்திய சுற்றுப் பயணத்தின்போது பாகிஸ்தான் அணியில் நட்சத்திர வீரர்கள் யாரும் இல்லை. இருப்பினும் அந்த அணி வெற்றி பெற்றது. அதேபோல் வேகமும், ஆர்வமும், அர்ப்பணிப்பும் கொண்ட வீரர்கள் தற்போதைய அணியிலும் உள்ளனர்.

கடந்த ஆண்டில் பாகிஸ்தானில் நடந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டித் தொடரில் நாங்கள் இந்திய அணியிடம் தோற்றோம். ஆனால் தற்போது எங்கள் அணி நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

அவுஸ்திரேலிய தொடரில் தோற்றாலும் நல்ல அனுபவம் கிடைத்து இருக்கிறது. இதனை இந்திய அணிக்கு எதிரான ஆட்டத்தில் செயற்படுத்துவோம்.

பாகிஸ்தானில் இந்திய அணியிடம் நாங்கள் தோற்றதை மறக்கவில்லை. அதற்காக பழிவாங்கும் எண்ணம் இல்லை. போட்டியில் சிறப்பாக ஆடும் அணி வெற்றிபெறும். சரியான வேகத்துடன் போட்டியில் ஆடுவோம். இரு நாட்டு ரசிகர்களும் ஆட்டத்தை ஆட்டமாக மட்டுமே பார்க்க வேண்டும். ஆட்டத்துக்காக ஆபத்தான விடயங்களில் இறங்கக்கூடாது. இவ்வாறு இன்சமாம் கூறியுள்ளார்.

# ஹைதராபாத் ஓபன் டென்னிஸ் சானியா மிர்ஷா பட்டம் வென்றார்




ஹைதராபாத் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பட்டம் வென்றதன்மூலம் சானியா. டபிள்யூ. டி.ஏ.டென்னிஸ் சம்பியன் பட்டம் கைப்பற்றும் முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனை படைத்தார்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற ஹைதராபாத் ஓபன் டென்னிஸ் தொடர்,ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் நடந்தது. ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் இளம் வீராங்கனை சானியா மிர்ஷா இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். விறுவிறுப்பான இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை நடந்தது.

பட்டத்தைக் குறிவைத்து சானியா மிர்ஷா, உக்ரைன் வீராங்கனை அல்யோனா பன்டா ரென்கோ மோதினர். அருமையாக விளையாடிய சானியா முதல் செட்டை 6-4 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் அவரது தவறுகளைப் பயன்படுத்திக் கொண்டார். பன்டா ரென்கோ செட்டைக் கைப்பற்றினார்.

ஆட்டத்தைத் தீர்மானிக்கும் மூன்றாவது செட் கடந்த முறை செய்த தவறுகளைக் குறைத்துக் கொள்ள ...சானியா கை ஓங்கியது. வேகத்தைக் கூட்டிக் கொண்டு விளாசித் தள்ள ... மூன்றாவது செட் சானியா வசம் வந்தது. 6-4, 5-7, 6-3 என்ற செட்கணக்கில் ஹைதராபாத் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் சம்பியன் ஆனார் சானியா.






இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரராக உருவெடுத்துள்ளார் இளம் கெவின் பீட்டர்சன். மேற்கு லண்டன் போட்டியில் விளாசல் ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர் அதிவேக சதம் அடித்த வீரர்களின் வரிசையில் 10 ஆவது இடம் பிடித்தார்.

# பெண் வீராங்கனையாக இனம்காட்டி பல பதக்கங்களை வென்றவர் கைது

சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் தன்னை ஒரு பெண்ணாகக் கூறிப் பங்குபற்றிய போலி வேடதாரி ஒருவர் உண்மையில் ஓர் ஆண் என சிம்பாப்வே பொலிசார் அவர் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.


ஈட்டியெறிதல், குண்டெறிதல் ஆகிய போட்டிகளில் இவர் பங்குபற்றியதாக ஹேரால்ட் புதினப் பத்திரிகை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. அவரை ஆண் என தெரியாத ஒரு பெண் வீராங்கனை அவர் முன்னிலையில்ஆடைகளைக் களைந்தமையால் அவரது கௌரவம் பாதிக்கப்பட்ட தாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர் கடந்த ஜூன் மாதம் போட்டு வானாவில் நடைபெற்ற பிராந்திய விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கப் பதக்கத்தையும், மொரிசியாஸில் நடந்த யுவதிகளுக்கான போட்டியில் ஐந்து தங்கப்பதக்கங்களையும் பெற்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தோனேஷியாவில் சுனாமி சீற்றத்திற்கு 96 விளையாட்டு வீரர்கள் பலி

சுனாமியில் சிக்கி 96 விளையாட்டு வீரர்கள் பலியாகி இருக்கலாம் என இந்தோனேஷியா அதிர்ச்சி அறிக்கை ஒன்றை அளித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 26 இல் சுனாமியால் தெற்காசிய நாடுகளுக்குப பெருத்த சேதம் ஏற்பட்டது. கடும் பாதிப்படைந்த இந்தோனேஷியாவின் ஏசக் மாகாணத்தில் நேற்று முன்தினம் ஒருஅதிர்ச்சி அறிக்கை வெளியானது. இதில் 96 விளையாட்டு வீரர்கள்பலியாகியோ அல்லது காணாமல் போயிருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

கராத்தே பிரிவில் பங்கேற்கும் 55 வீரர்களும், கால்பந்து, வாள் சண்டை, வில்வித்தை, குத்துச்சண்டை, வலைப்பந்து, பளுதூக்குதல் பிரிவில் 41 வீரர்களும் இதில் அடங்குவர். 20 இக்கும் மேற்பட்ட விளையாட்டுப் பயிற்சி மையங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. இவற்றைப் பராமரிக்கும் பணிகளை விரைவில் மேற்கொள்ள இந்தோனேஷியா விளையாட்டு அமைப்பு அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.



**சிந்தனைக்கு**

பெண் அடிமைத்தனத்திற்கு எதிராகப் பெண்களே போர்க்கொடி உயர்த்த வேண்டும்;போராடவேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஏமாற்றமே மிஞ்சும்!

சிறிலங்கா அரசின் மீது இனியும் நம்பிக்கை வைத்துச் செயற்படுபவர்கள் மீது தமிழ்மக்கள் நம்பிக்கை வைக்கலாமா? இதனால் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தைத் தவிர வேறு எதுவும் பயன் கிடைப்பதற்கு வாய்ப்புண்டா? இது இன்று தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக கேட்கப்படும் கேள்வியாகவுள்ளது.

சிறிலங்கா அரசு இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றிற்கு வரும் என்றோ அன்றி தமிழ் மக்களின் இழப்புக்களுக்குப் பரிகாரம் தேடும் என்றோ யாராவது இனியும் முழு நம்பிக்கையுடன் இருப்பார்களேயானால் அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் வர்க்கத்தினராகவே நிச்சயம் இருக்க முடியம்.

அவ்வாறு இல்லாவிடில் சிறிலங்கா அரசு மீது நம்பிக்கை வைத்து அதாவது தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வொன்றை வழங்கு வார்கள் என்றோ, தமிழ் மக்களுக்குரிய நிவாரண உதவிகள் உட்பட்ட அனைத்தையும் சமனான அளவில் பகிர்ந்தளிப்பார்கள் என்றோ யாராவது கூறுவர்களேயானால் அவர்கள் சிறிலங்கா அரசு சார்ந்தவர்களாக மட்டுமே இருக்கமுடியும்.

தமிழ் மக்கள் சந்தித்த அனர்த்தம் என்ற வகையில் சுனாமி தான் முதலாவது என்பதல்ல. அதற்கு முன்னதாக 20 ஆண்டுகளுக்குமேலாக நீடித்த யுத்தம் காரணமாக மக்கள் பெரும் அனர்த்தத்தைச் சந்தித்திருந்தனர். ஆனால் யுத்தம் இடைநிறுத்தப்பட்ட போதும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நிவாரணம் எதை வழங்குவதற்குத் தயாராக இல்லை.

யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளவென புதிய கட்டமைப்பொன்றை உருவாக்க மேற்கொண்ட முயற்சியில் மூன்றாண்டுகள் கழிந்தனவே ஒழிய, மக்கள் புனர்வாழ்வைப் பெறுவதற்கான எந்தவித பணிகளையும் மேற்கொள்ள அரசாங்கம் முன்வரவில்லை.

மாறாக புனர்வாழ்வு புனரமைப்பிற்கான மார்க்கங்களைதடைசெய்வதிலேயே அரசாங்கம் குறியாக இருந்தது. சர்வதேச உதவிகள் தமிழ் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற காரணத்தினால்தான் டோக்கியோ மாநாட்டு நிதியைப் பெற்றுக் கொள்வதில் கூட அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

இந்நிலையில் இரண்டாவது பெரிய அனர்த்தமாகச் சுனாமி அனர்த்தத்தினைச் சுட்டிக் காட்ட முடியும், ஆனால் இவ் அனர்த்தத்தின் பின்னரான சூழ்நிலை யுத்தத்தின் பின்னரான சூழ்நிலையில் இருந்து பெரும் மாற்றம் கண்டதாக இருந்தது. அதாவது யுத்தத்தின் பின்னர் சிறிலங்கா அரசு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கிப் போயிருந்தது. அந்நியச் செலாவணிக்குப்பெரும் தட்டுப்பாடு இருந்தது. ஆனால், சுனாமியின் பின்னர் இந்நிலையில் எதிர்மறையான மாற்றம் இருந்தது. வெளி நாடுகள் நிவாரண மற்றும் புனர் நிர்மாணப் பணிக்கென வழங்கிய பெருமளவு நிதி கைகளில் உள்ளது.

அதாவது யுத்தம் நிறுத்தப்பட்ட பின்னரும் கூட சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே நிதியுதவி என்றதாக இருந்தநிலை சுனாமியினால் மாற்றம் கண்டது. அதாவது நிதியுதவி கிடைப்பதற்கு இருந்த இடையூறு நீங்கியது. பெருமளவில் நிதியுதவியும் வந்து குவிந்தது. ஆனால் உதவிகள் குவிந்தும். சிறிலங்கா அரசு நிவாரண உதவிகளை தமிழ் மக்களுக்கும் உரிய முறையில் பகிர்ந்தளிக்கும் நிலையில் இல்லை.

மாறாக சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியை குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை ஐ.நா. சபைப் பொதுச்செயலர் கொபிஅனான் பார்வையிடுவதற்குக கூட அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்தது. இந்நிலையில் அரசாங்கம் தமது கையில் கிடைத்த உதவிகளைத் தமிழர் தாயகத்திற்கும் உரிய அளவில் பகிர்ந்தளிக்கும் என எவ்வாறு எதிர் பார்க்க முடியும்?

அத்தோடு அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட்ட போராளிகள் மீதான தாக்குதலுக்கு ஐ.நா.சபை பொதுச் செயலாளர் தெரிவித்த கண்டனத்தினால் அரசின் கூட்டாளிகள் பலர் சீற்றம் கொர்ண்டுள்ளனர். அதாவது விடுதலைப்புலிகளின் மரணத்திற்கு எவ்வாறு ஐ.நா. செயலர் அனுதாபம் தெரிவிக்கலாம் என்பதே இதுவாகும்.

அதாவது தமிழ் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அனுதாபம் தெரிவிப்பதையே கண்டிக்கும் ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகள் சர்வதேச நாடுகள் வழங்கிய உதவிகளையும், தமிழ் மக்களுக்குரிய பங்குகளையும் பகிர்த்தளிக்கும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இவற்றைப் புரிந்து கொள்ளாமலும், புரிந்து கொண்டாலும் புரியாதது போலவும் சிறிலங்கா அரசிற்கு உதவுகின்றவர்கள் தமிழர் குறித்து எள்ளளவும் கரிசனையற்றவர்களே, ஆகையினால் அவர்களைத் தமிழ் மக்கள் நம்பினால் இறுதியில் ஏமாற்றமே மிஞ்சுவதாக இருக்கும். இதனை மேலும் திருத்தமாகக் கூறுவதனால் சிறிலங்கா அரசை நம்புவதும், இவர்களை நம்புவதும் ஒன்றாகவே இருக்கும்.

# துணிவும் இலட்சியமும் மிக்க மனித உரிமைகள் பரிந்துரையாளர்

**-மாமனிதர் சந்திரநேரு குறித்து வட-கிழக்கு.ம.உ.செயலகம் அறிக்கை**

துணிவும் இலட்சியமும் மிக்க மனித உரிமைகள் தொடர்பான பரிந்துரையாளரும், ஆர்வலரும் பிரச்சாரகருமான திரு. சந்திரநேரு அவர்கள் வடக்குக் கிழக்கில் நிலவும் அதியுயர் இராணுவ மயப்படுத்தப்பட்ட வரவேற்கத்தகாத சூழல் ஒன்றுக்குள் முன்னின்று செயற்பட்டவர் என மாமனிதர் அரியநாயகம சந்திரநேரு அவர்களின் படுகொலை குறித்து வடக்குக்கிழக்கு மனித உரிமைகள் செயலகம் விடுத்த பதிவில் தெரிவித்துள்ளது. அதன்விபரம் வருமாறு :- 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் நாள் கூடிய வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலக ஆளுநர் சபை வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலக நிறுவுனர்களில் ஒருவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு ஆரியநாயகம சந்திரநேரு அவர்களின் திடீர், துன்பகர மறைவை மிகுந்த துயரத்துடனும், இழப்புடனும் பதிவு செய்கிறது.

துணிவும் இலட்சியமும்மிக்க, மனித உரிமைகள் தொடர்பான பரிந்துரையாளரும், ஆர்வலரும், பிரச்சாரகருமான திரு சந்திரநேரு அவர்கள் வடக்குக்கிழக்கில் நிலவும் அதியுயர் இராணுவ மயப்படுத்தப்பட்ட,வரவேற்கத்தகாத சூழல் ஒன்றுக்குள் முன்னின்று செயற்பட்டவர். தமிழர் பிரதேசத்தைப் பிடித்தாட்டுகின்ற மனிதரால் உருவாக்கப்படுவதும், இயற்கையால் ஏற்படுத்தப்படுவதுமான அழிவுகளால் பாதிக்கப்பட்ட நிராதரவான மக்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தீவிரமாக உழைத்தவர். தனிமனிதன் என்ற நிலையிலும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் அவரது தனிப்பட்ட முயற்சிகள் தான் ஏனைய மனித உரிமை ஆர்வலரைப் போன்று செயற்படவும், அதனூடாக வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவுனரில் ஒருவராக மாறுவதற்கும் காரணமாகியது. ஐ.நா சாசனத்திலும், சர்வதேச உடன்படிக்கைகளிலும் சொல்லப்பட்ட மனித உரிமைகளும், சுதந்திரமும் மறுக்கப்பட்ட அப்பாவி மக்களின் தேவைகளைத் தனி மனிதனாக நின்று பூர்த்தி செய்வதற்கு அவருக்கு உறுதுணையாக நின்றது அவரது ஆளுமையும், மனிதாபிமான இயல்புமே. எந்தவொரு இடர்பாடான நிலையிலும் புன்முறுவல் தவழும் முகத்துடன் நிலைமைகளை எதிர்கொள்ளும் அவரது பாங்கு ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக அமையவேண்டிய தொன்று. அவரது பிரதேசத்திலும், தேர்தல் தொகுதியிலும் அவரது மக்களுக்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் எண்ணற்றவை. பெறுமதிமிக்கவை. செய்ய வேண்டிய நேரத்தில் செய்யப்பட்டவை. அவற்றில் சிலவற்றை இங்கு பதிவது பொருத்தமானது.

1.நீண்ட கால, வன்முறை சார்ந்த இனமுரண்பாட்டின் விளைவாக விருத்தியடைந்த தனித்துவ இயங்கியல் ஒன்றின் பெறுபேறாக அமைந்த காணி உரிமைகளுடன் தொடர்புடைய விவகாரங்களில் தீவிரமாகத் தன்னைப் பிணைத்துக் கொண்டவர்.

2.பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகி நீண்ட காலம் நீதி பெறும் வாய்ப்பின்றிச் சிறையில் வாடியவர்களை விடுவிப்பதற்கு முன்னின்று உழைத்தவர்

3.பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் சிறிது காலமே இருந்த போதும் உள்ளூர், சர்வதேச மனித உரிமைகள் சமூகம் அவசியமான, சரியான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு உதவும் வகையில் வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை வெளிச்சத்துக்குக்கொண்டு வந்தவர்

4.கடந்த ஒக்டோபர் 2004ல் ஜெனீவாவுக்கு விஜயம் செய்த வடக்குக்கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினராக இருந்து மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச நிறுவனங்களுடன் உரையாடி வடக்குக் கிழக்கின் மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்தது மட்டுமன்றி, நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும், மனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் அனுபவிப்பதற்கும் சாத்தியமான வழிமுறைகளைப் பரிந்துரைத்தவர்

5.இறுதியாக, கொலை செய்யப்பட முன்னர் கூட கடந்த மார்கழி 26ஆம் நாள் இடம்பெற்ற சுனாமிப் பேரலையின் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி, நீண்ட கால உதவியை மையமாகக் கொண்ட நிவாரண, புனர்வாழ்வுப்பணிகளில் ஈடுபட்ட பின்னர் மட்டக்களப்புக்குத் திரும்பும் வழியில் இந்த வன்முறையுடன் கூடிய இறப்பை அவர் எதிர்கொள்ள நேரிட்டது. இவருக்கு ஏற்பட்ட திடீர் துன்பகர முடிவு வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்துக்கும், அதனுடன் தொடர்பான உள்ளூர், சர்வதேச அமைப்புகளுக்கும், வடக்குக் கிழக்கின் நிராதரவான மக்களுக்கும் ஈடுகட்ட முடியாத இழப்பாகும். இவரது இடத்தை நிரப்புவது இயலாதது எனக் கூறமுடியாவிடினும் கூட மிகக்கடினமானது. இவரது ஆத்மா சாந்தியடைவதாக!

# திருமலையில் தற்காலிக வீடுகள் அமைக்கும் பணி மந்தகதியிலேயே நடைபெறுகின்றது

**- திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்**

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக வீடுகள் அமைத்துக்கொடுக்கும் பணி மிகவும் மந்த கதியிலேயே நடைபெறுகின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் விரும்பும் இடத்திலேயே அவர்களுக்கான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் விரும்பிய இடத்தில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதால் அம்மக்கள் தமது தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலைமை ஏற்படும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார். திருகோணமலை மாவட்டத்துக்கான சுனாமி அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சர் நஜீப் ஏ.மஜீத், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம், ஜயந்த விஜயசேகர மற்றும் சர்வதேச உள்நாட்டு தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். இதில் அத்தியாவசிய சேவைகள் பிரதி ஆணையாளர் ஜி.ஜயரத்னவும் கலந்து கொண்டார். எழிலன் அங்கு தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில் - "திருகோணமலை மாவட்டத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமாக ஆராயப்பட்டு வருகிறது. ஆனால் அவர்களுக்கான போக்குவரத்து வசதி கள் பற்றி யாரும் அதிகம் அக்கறை கொள்வதில்லை. இலங்கைத்துறை முகத்துவாரத்திற்கும், சீனன்வெளி கிராமத்திற்குமிடையிலான போக்குவரத்துக்கு மிதக்கும் படகுச் சேவை மேற்கொள்ளப்பட வேண்டும். இது பற்றிப் பல தடவைகள் அரச அதிகாரிகளுக்குத்தெரியப்படுத்தியும் அவர்கள் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. இப்பிரதேச மாணவர்கள் வள்ளம் ஒன்றின் மூலமாகவே தமது போக்கு வரத்தினை மேற்கொள்கின்றனர். கடந்த வாரம் அந்த வள்ளம் கவிழ்ந்து அதில் பயணம் செய்த 5 மாணவர்களும் நீரில் மூழ்கினர். மிகுந்த சிரமத்தின் பின் அந்த மாணவர்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டனர். இந்நிலை தொடர்ந்து இருக்கக்கூடாது. விபத்துக்கள் நடந்த பின்னர் நாங்கள் அதனைப் பற்றி சிந்திப்பதைக் காட்டிலும் விபத்து நடைபெறாது பாதுகாப்பதே முக்கி யமான தாகும்." என்றார். மிதக்கும் படகு ஒன்று கிண்ணாதுறையில் இருக்கின்றது. இதனை இலங்கைத் துறைக்கு கடல் மார்க்கமாக சிறிலங்கா கடற்படையினரின் துணையுடன் இழுத்துச் செல்ல வேண்டியிருக்கின்றது. பாதுகாப்புப் காரணங்களுக்காக கடற்படையினரால் இலங்கைத் துறை முகத்திற்குஅதனைஇழுத்துசசெல்ல முடியாது இருப்பதாக கடற படையினர் தெரிவித்ததாக மேலதிக அரசாங்க அதிபர் சிங்கராயர் அங்கு தெரிவித்தார்.

## சுனாமியின் போது சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடிய கைதி துப்பாக்கிகளுடன் கைது

கடற்கொந்தளிப்பு ஏற்பட்டதினம் மாத்தறை சிறைச்சாலையிலிருந்து தப்பிய ஒரு கைதி துப்பாக்கிகளுடன் பண்டாரகமவில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து இரண்டு துப்பாக்கிகள், அவற்றிற்கு பயன்படுத்தப்படும் ரவைகள், அவரால் கடத்தப்பட்ட இரண்டு வாகனங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் பயணம் செய்த வான் ஆழிப்பேரலையின் போது காலியில் இருந்து கடத்திவரப்பட்டதென தெரிவிக்கப்பட்டது. ஓர் பேனையின் அளவான சிறிய துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

# நான்கு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.இல் 23 ஆம் திகதி போராட்டம்

## கடற்றொழிலாளர் கூ.ச அழைப்பு

யாழ்.மாவட்டத்தில் இம்மாதம் 23 ஆம் திகதி 4 கோரிக்கைகளை முன்வைத்து வெகுசனப் போராட்டம் ஒன்று நடாத்தப்படவுள்ளதாக கடற்றொழில் சமாசச் செயலாளர் சூரியகுமார் தெரிவித்தார். இப்போராட்டம்

1) 2002 ஆம் ஆண்டுபுரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் எமது மக்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் அரசினால் வழங்கப்படவில்லை.

2) 26.12.2004 அன்று நடந்த சுனாமி அனர்த்தத்தின் போது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் நலன்புரி முகாம்களில் இருந்தவேளை இன்றுவரையும் அரசாங்கத்தினால் ஏதுவித உதவிகளும் வழங்கப்படவில்லை. இது மட்டுமல்ல சர்வதேச ரீதியாக வழங்கப்பட்ட பொருட்களைத் தொலைக்காட்சி மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும், அறிவிக்கின்றோம். அதில் ஒரு பகுதி பொருட்களாவது எங்கள் பகுதி மக்களுக்கு வழங்கப்படவில்லை.

3) அழிந்துபோன சமூகத்தின் எதிர்கால வாழ்வாதாரத்தினைத் திட்டமிட்டு வளப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட செயலணிக்குழுவை அரசு ஏன் இன்னும் இணைத்துக் கொள்ளவில்லை.

4) சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் எமது மக்களின் காவலர்களாக இருந்து எமது மக்களைக் காத்து நின்ற நிராயுதபாணிகளாக இருந்த போராளிகளை வெலிக்கந்தவில் சுட்டுக்கொன்றது குறித்தும் அரசினுடைய நடவடிக்கைகளைக் கண்டித்தும், கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் யாழ்.மாவட்ட சம்மேளனம் முடிவெடுத்துள்ளது. இச்சம்மேளனத்தினது முடிவிற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒன்று திரண்டு ஆதரவு வழங்க வேண்டுமென சம்மேளனம் கேட்டுள்ளது. (45,27)

### யாழ்....

நாளை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு அமைப்புக்களிணைந்து கண்டனப் பேரணியொன்றினை நடாத்தவுள்ளன.

அன்று காலை நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் கூடும் கூட்டுறவாளர்கள் யாழ். பருத்தித்துறை வீதியூடாக, நல்லூர் கோவில் வீதியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தை ஊர்வலமாகச் சென்றடையவுள்ளனர். அங்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை அவர்களும் கையளிக்கவுள்ளனர். (27, 41)

## சுதந்திரப் பறவைகள் ஏடு இன்று வெளிவருகிறது

விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பினரின் அதிகார பூர்வ ஏடான "சுதந்திரப் பறவைகள்" ஏட்டின் 19ஆவது பறவை ஏடு இவ்வருடத்தின் முதலாவது இதழாக இன்று வெளிவருகின்றது. இதிலே தீபா குமரேஷ் எழுதிய சிகரங்களைத் தொட்ட பின்னும் இன்றும் பெண், கருணாகரன் எழுதிய துவேசப் பேரலையின் முன் வட-கிழக்குச் சுனாமி ஒரு சிற்றலை, அலையிசை எழுதிய படகுக்காலி, வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் எழுதிய உளநெருக்கீட்டில் இராது மீண்டு எழுவோம், தமிழ்க் கவியின் தீச்சுடர் - 10ஆவது அங்கம் உதயலட்சுமி எழுதிய அரை மணிப்பொழுதும் ஆயிரம் கதைகளும், அர்த்தநாரீ எழுதிய வளரிளம் பருவம், அகநிலா எழுதிய எழுமின் போன்ற கட்டுரைகளும், தாட்சாயனி எழுதிய பாசி சிறுகதையும், மலைமகளின் புலியாத்திரை, அகநிலாவின் வீரம் - காதல் போன்ற ஆக்கங்களும், அம்புலியின் ஆனாலும் சுனாமிகள் பரவாயில்லை என்ற கவிதையும், முன் பக்கத்திலே சுனாமியின் தாக்க அவலங்களைச் சித்தரிக்கும் வர்ணப் படங்களையும் இறுதிப் பக்கம் ஆதித்த நிலாவின் தேசியத் தலைவரின் படத்துடன் கூடிய விளைவுகளில் இருக்கிறது விசயம் எனும் ஆக்கமும், கௌசல்யன் படுகொலையின் செய்தி என்ன என்ற ஆசிரியர் தலையங்கமும் உள்ளடக்கியதாக இது வெளிவருகிறது.

### மட்டு...

துள்ளார். கொக்கட்டிச்சோலையில் உள்ள மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நேற்று 10.30 மணியளவில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரசஅதிகாரிகள் பலர் கலந்துகொண்டுள்ளனர். அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவில் புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன், மட்டு-அம்பாறை மாவட்ட தளபதி ராம், மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர், இளந்திரையன், மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், மட்டு-அம்பாறை மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

### அமெரிக்காவுக்கு...

செய்துவிட்டு கடற்படையிலிருந்து இன்னொரு அதிகாரியை அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளார். கப்பலைப் புதுப்பிக்கும் பணி 69 கோடி செலவில் முடிவடைந்த நிலையில் இக்கப்பல் இலங்கை நோக்கிப் புறப்படவுள்ளது. இந்தக்கப்பலில் பணியாற்றுவதற்கென சிறிலங்கா கடற்படையினரிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரு தொகுதியினருக்கு அமெரிக்க கடற்படையினர் பயிற்சியளித்து வருகின்றனர். அந்தத் தொகுதியிலிருந்தே ஐவர் காணாமல்போயுள்ளனர். இவர்களில் கப்பலின் இயந்திர அறை உத்தியோகத்தர் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது. காணாமல் அமெரிக்காவில் எந்தப்பகுதிக்குள் ஓடித்தப்பினர் என்று அறியமுடியாதுள்ளதாகப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### புதுக்குடியிருப்பு....

சார் நிறுவனங்களும் மூடப்பட்டிருக்கும். இக் கண்டனக் கூட்டத்தில் அனைவரையும் அணிதிரண்டு வருமாறு முல்லை மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினரால் அறைகூவல் விடுத்துள்ளது.

இந்த நிகழ்வையொட்டி புதுக்குடியிருப்பு நகரப் பகுதிகளில் சிவப்பு, மஞ்சள்கொடிகள் கட்டியும் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டும் உள்ளது. இதேவேளை அஞ்சலி நிகழ்வும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வெலிக்கந்தையில் 4 போராளிகள் உட்பட வீரச்சாவு அடைந்தநாட்டுப்பற்றாளர் மாமனிதர் சந்திரநேரு அவர்களின் வீரவணக்க கூட்டம் முள்ளியவளையிலும் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இந்த வீரவணக்கக் கூட்டம் நடைபெறவுள்ளது.(8,20)

### அரசுடன்....

கிறார்கள். வேண்டுமானால் போகட்டும். இப்படி ஆட்சி செய்ய முடியாது. தீர்வுகண்டுவரும்போது இல்லை. இல்லை... இல்லை இப்படியான சொல்லைப் போட முடியாது. அந்தச் சொல் இப்படி இல்லை. அதில் ஒரு எழுத்துப் பிழை இன்னொரு எழுத்தைப் போட வேண்டும். அந்த எழுத்துப் பிழை என்றாலே நாங்கள் போகிறோம் என்கிறார்கள்.

நண்பர்களே இது கேலிக் கூத்து. நண்பர்களே முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். எனவே,புலிகளின் தலைவர் பிரபாகரனைவிட எங்களு டைய ஆட்களுக்கே என்னைக் கொல்ல வேண்டியுள்ளது.

நீங்கள் சொல்வதுபோல் நான் சற்றுக் கடுமையாகத்தான் நடந்து கொள்கிறேன். அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. வீடு செல்ல முதல் இவற்றை முடித்துவிட்டுச் செல்ல வேண்டுமென எண்ணி இருக்கிறேன்.

இதற்கு உங்கள் ஆதரவு இருக்கின்றதா அப்படி இருந்தால் செய்வோம் என்றார் சனாதிபதி சந்திரிகா.

### அவுஸ்....

இங்கு லெப். கேணல் கௌசல்யன், மேஜர் புகழன், மேஜர் செந்தமிழன், 2ஆம் லெப். விதிமாறன் ஆகியோரின் இறுதிவணக்க நிகழ்வுகளின் ஒளிநாடா அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது. இந்நினைவுகூரும் நிகழ்வில் சசிதரன், விமலன், கலாநிதி ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் நினைவுரை ஆற்றினார்கள். தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சபேசன் இந்நினைவுரைக்கூட்டதை ஒருங்கிணைத்து உரையாற்றினார். இந்நினைவுரைக்கூட்டத்திற்கு தேவாலய மண்டபம் நிறைந்தளவில் மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

### மாமனிதர்...

தில் இருந்து தான் இறக்கும் வரை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்துபவராகவும் இருந்து எத்தனையோ கஸ்டங்கள் இடர்பாடுகள் மத்தியிலும் கடமையாற்றி வந்தது. மட்டுமல்லாமல், அம்பாறை மாவட்டத்தில் ஏற்படும் மனித உரிமைமீறல்களை உடனுக்குடன் மேலிடத்திற்கு தெரியப் படுத்திவந்த இவரின் செயற்பாடு நினைவு கூரத்தக்கது.

காலை 9.30 மணிக்கு செயலகத்தின் முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்திரநேருவின் திருவுருவப் படத்திற்குரிய ஈகச்சுடரினை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பென்னம்பலம் நிமலன் கார்த்திகேயன், க. சிவபாலன், செல்வி சிறி அருளானந்தம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து மனித உரிமைகள் செயலக கொடியினை செயலக இயக்குனர் வணபிதா கருணாரெட்ணம் அடிகளார் ஏற்றிவைத்தார். கொடிஅரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. தொடர்ந்து மாதாந்த கூட்டம் செயலகத்தில் கருணாரெட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. (கு)

### மாமனிதர் சந்திர நேருவுக்கு...

பாளர் பரா, மூத்த தளபதி கேணல் ரமேஸ் உட்படப் பலர் கலந்துகொண்டு தமது வணக்கத்தைச் செலுத்தினர். சமூக, சமயத் தலைவர்கள், அரசியல்வாதிகள், விடுதலைப் புலிகளின் தளபதிகள், உட்படப் பலர் நினைவுரையாற்றினார்கள்.

### அரசியல்....


ணுவப் பேச்சாளர், இப் பயணம் குறித்து முன்னரே தமக்கு அறிவிக் கப்படவில்லை எனவும், அறிவிக் கப்பட்டிருந்தால் கௌசல்யனுக்கு பாதுகாப்பு வழங்கியிருப்போம் என்று கூறியிருந்தார். கொழும்பு தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். சு.ப.தமிழ்ச்செல்வன் தனது செவ்வியில் மேலும் கூறியதாவது: அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போராளிகள் பாதுகாப்புக்களை கேட்கவேண்டிய தேவை இல்லை. அவர்கள் எங்கும் சுதந்திரமாக நடமாடி தங்களுடைய அரசியல் நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் முன்னெடுக்கலாம். அதுதான் ஒப்பந்த விதிமுறை. அதுதான் ஒழுங்கு. எங்களுடைய தளபதிகளோ அல்லது படையணிப் போராளிகளோ அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் நகர்கின்ற போதுதான் அதற்கு சிறிலங்கா இராணுவத்தினரின் பாதுகாப்பும், வழித்துணையும் கேட்கப்படும். அதுதான் வழமை. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை. அவ்வகையில்தான் கௌசல்யன் தன்னுடைய பணிகளை தொடர்ச்சியாக ஆற்றிவந்தார். சம்பவம் இடம்பெற்ற அன்று மட்டுமல்ல. பலதடவைகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் போக்குவரத்துக்களைச் செய்திருக்கின்றார். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நடமாடி, மக்களுடைய தேவைகளை கேட்டறிந்து, மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்ற சமூக வேலைத் திட்டங்களை பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்திருக்கின்றார். ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போதும் பாதிக்கப்பட்ட - பேரழிவுகளைச் சந்தித்த - எங்களுடைய மக்கள் மத்தியிலே போய்நின்று பணியாற்றியவர். அப் பணிக்காகவே அவருடைய நடமாட்டமும் அவருடைய பயணமும் அமைந்தது. இதனை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டு பெரியதொரு படுகொலையை செய்திருக்கின்றார்கள். என்று கூறினார்.


## யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பணிமனை

தமிழர் தாயகத்தின் தேசிய நாளிதழான ஈழநாதம் – அதன் புதிய பணிமனையினை யாழ்ப்பாணத்தில் பழைய இடத்தில் மீண்டும் திறந்துள்ளது என்பதனை எமது வாசகர்கள் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

உங்கள் தொடர்புகளுக்கு } இல: 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, தொலைநகல்: 021-2227917


## சாவு அறிவித்தல்



### சபாபதி வேலாயுதப்பிள்ளை

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும்,இல.103 உதயநகர் மேற்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி வேலாயுதப்பிள்ளை 13.02.2005 நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் பொன்னரியத்தின் அன்புக் கணவரும், சிவகடாச்சம் (பிரான்ஸ்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சகிலன் (பேரன்), அபிரா, இந்தூரன் ஆகியோரின் பூட்டனும், தெய்வேந்திரன், யோகாம்பிகை ஆகியோரின் மாமனாரும் ஆவார், அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.02.2005) மாலை 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-
க.தெய்வேந்திரன் (மருமகன்)
இல:- 103
உதயநகர்மேற்கு, கிளிநொச்சி.

(5727)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது